# எழுத்து

## புதுப் பார்வையில் பழைய தமிழ்க்கவிதை
சி. கனகசபாபதி

CONNEMARA PUBLIC LIBRARY
5 - DEC 1966

## மயக்கம் தெளிந்தது
ம. சீ. கல்யாணசுந்தரம்

## புத்தம் வீடு ஆய்வு பற்றி
செ. ஜேசுதாசன்
சி. சு. செல்லப்பா

## முட்டை ஒரு நினைவு
ஜோதி ராமலிங்கம்

**கவிதைகள் :**

வை. ரங்கநாதன்,
ஹரி சீனிவாசன்,
சு. சங்கரசுப்ரமண்யன்,
டி. ஈ. ஹல்யூம்



தமிழ் வளர்த்த
கல்கி
ரா. கிருஷ்ணமூர்த்தி
9-9-1899—5-12-1954

டிசம்பர் 66 96 50 பைசா

8-ம் ஆண்டு
ஏடு 96
டிசம்பர்
1966

# எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

தலையங்கம்

## ஒன்பதாவது ஆண்டு நோக்கி

அன்புள்ள வாசகர்களே !

எட்டு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டது எழுத்துக்கு இந்த ஏட்டோடு. ஒன்பதாவது ஆண்டு நோக்கி அடுத்த ஏடாகவரும் ஜனவரி மாத ஏடு பற்றி சில வார்த்தைகள். அதிக பக்கங்களுடன் புதிய அம்சங்களுடன் வெளிவரும் என்று சென்ற ஏட்டில் கொடுத்திருந்த தகவலை பார்த்திருப்பீர்கள். புதிய அம்சங்கள் என்னென்ன என்று இப்போது திட்டமாக சொல்லமுடியாது; யூகித்தும் சொல்ல முடியாது. எழுத்து சட்டையுரிப்பு செய்துகொள்ளும் என்று பொதுப்படையாகத் தான் சொல்ல முடியும். சட்டையுரிப்பு எத்தன்மையது, என்று நீங்கள் அடுத்த எட்டை பார்த்து உள்ளடக்கத்தை அறிந்து நிதானிக்கவேண்டிய காரியம். ஆனால் சுருக்கமாக இதை மட்டும் சொல்லமுடியும்: 'வ. ரா. மணிக்கொடி' (கே. சீனிவாசன்—வ. ரா.—டி. எஸ். சொக்கலிங்கம் முக்கூட்டு)போல ,இந்த காலத்துக்குத் தக்கபடி இருக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை. சபலம் என்று வைத்துக்கொள்ளலாம். வ. ரா. ஒரு 'பெரிய உருவம்' அணுகுவது அப்படி ஒன்றும் எளிது இல்லை; அதன் சாயலாவது விழுந்தாலே போதும்.

வ. ரா. மணிக்கொடி சிந்தனையை தூண்டிவிட்ட தூண்டுகோல், படைப்புக்கு உரம் இட்ட களம். உருவ வகைகளுக்கு வகை செய்த உந்துதல், தற்காலத்தை, இன்றய இலக்கியத்தில், உணர்வாகவும் அநுபவமாகவும், வெளியீடாகவும் சிந்தனைக்கும் படைப்பு உள்ளடக்கங்களுக்கு சுமரணை ஏற்றிய தீபம். இன்று அது போல் ஒன்று இருந்தால் என்ற நினைப்பில் தான் இந்த சட்டையுரிப்பு சபலம்.! விமர்சனம், புதுக் கவிதை இந்த இரண்டு துறைகளில் தான் எழுத்துவின் ஏதோ துளியூண்டு சாதனையே தவிர மற்ற துறைகளில் இம்மியும் இல்லை. இன்று இவை இரண்டோடு வேறு பலவும் தேவைப்படுகிறது.

காலப்போக்கில் ஏற்படும், மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப வளைந்து கொடுத்து இணக்கம் காட்டுவதிலேதான் மரபு அழியாமல், விடாமல் உயிர்ப்புடன் இருக்க முடியும். இல்லாவிட்டால் செத்த மரபாகிவிடும். தமிழ் இலக்கிய மரபு செத்த மரபாக ஆகிவிடவில்லை என்றாலும் படுக்கையில் கிடந்தது. பாரதி வந்து தற்கால சொல்லையும், பொருளையும் ஊட்டி மரபு திடம் பெறச்செய்தான். வ. ரா. வும் கல்கியும் பாரதிதாசனும் பாரதி தடம் தொடர்ந்தார்கள். அதுக்குப்பின்? இப்போது கொஞ்சம் சோகை மரபுக்கு. எனவே இன்றய தேவைக்கு ஏற்ப எழுத்து அணில்போட்ட கல்லாக கொஞ்சம் ஈடுகொடுக்கப் பார்க்கும் முயற்சியே இந்த திருப்பம் முடிகிறதா, எந்த மட்டுக்கு முடிகிறது பார்ப்போம்.

உங்கள் இந்த ஆண்டு சந்தா டிசம்பருடன் முடிந்துவிட்டது. 1967ஆம் ஆண்டு சந்தாவை (ரூ. 6–00 ஒரு ஆண்டு; ரூ. 15–00 மூன்று ஆண்டுகளுக்கு) இந்த டிசம்பர் ஏடு கிடைத்த மறு தபாலில் அனுப்பி வைத்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன். எழுத்து அதிகப் பக்கங்களுடன் வர இருக்கிறது. குறித்த காலத்திலும் வரவேண்டும். இதுக்கு அதன் பொருளாதார வசதி சரியாக இருந்தாக வேண்டும். உங்கள் அத்தனை பேரது சந்தாவும் இந்த வேண்டுகோளைப் படித்ததும் வந்து விட்டால்தான் நான் திட்டமிட முடியும்.

சென்ற ஆண்டுகள் போல் மாதங்கள் கழித்து அவ்வப்போது அனுப்பிக்கொண்டிருக்கும் பழக்கம் இருந்தால் எதுவும் செய்ய முடியாது. எழுத்துக்கு பாங்கில் போட்டு வைத்திருக்கும் மூலதனம் எதுவும் கிடையாது. உங்கள் சந்தாதான். ஆகவே உடனே டிசம்பரிலேயே நீங்கள் –வேறு சமாதானங்கள் இல்லாமல் அனுப்பி வைப்பதை எதிர் பார்க்கிறேன். நன்றியுள்ளவனாக இருப்பேன். எழுத்து வேண்டாதவர்கள் ஒரு வரி எழுதிவிட்டாலும் நன்றியுள்ளவனாக இருப்பேன். டிசம்பருக்குள் சந்தா வராவிட்டால் ஜனவரி எழுத்துவை, வி. பி. யில் அனுப்பலாம் என்று கூட தோன்றுகிறது. அவநம்பிக்கையால் இல்லை பணம் கைக்கு உடனடியாக கிடைக்க ஆசைப்படுவதால் தான்; சந்தாப் பணம் இந்த ஆண்டு டிசம்பரிலேயே கிடைக்க வேண்டிய அவசியத்தால் தான். இதை உங்களுக்கு எழுதிய தனிக் கடிதமாக கருதி உதவி செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

---

**1967-க்கான உங்கள்**

**சாந்தாவை உடன்**

**அனுப்பிவைக்கும்படி**

**கேட்டுக்கொள்கிறேன்**

—சி சு. செ.

CONNEMARA ... LIBRARY
5 - DEC 1966

# புத்தம் வீடு ஆய்வுபற்றி

## கடிதம்

மதிப்புக்குரிய எழுத்து ஆசிரியர் அவர்களுக்கு,
வணக்கம்,

'புத்தம் வீடு' நாவலைப்பற்றித் தாங்கள் எழுதிய ஆய்வு விமர்சனத்தைப் படித்தேன். அதற்கு முப்பத்தைந்து மார்க்கு—பாஸ் மார்க்கு போட்டிருக்கிறீர்கள். விமர்சகருக்கு ஒரு நூலைத் தன் அறிவின் எல்லைக்குள் நின்று ஆராயவும் குறைகளைக் காணவும், பிடித்த அம்சங்களைப் புகழவும் உரிமை இருக்கத்தான் செய்கிறது. ஆனல் மார்க்குப் போடுகிற விஷயம் வரும்போது நான் ஒரு ஆசிரியன் ஆனதால் சொல்லுகிறேன்-நம்மைவிட நம் கலையில் தேர்ந்த ஒருவருக்குத்தான் அந்த உரிமை கிடைக்கிறது; அதுவும் நாம் அனுமதிக்கும் போது மட்டும். இல்லாவிட்டால், அது ஆசிரியருக்கு மாணக்கன் மார்க்குப் போடும் கதையாகி விடும். விமர்சகர் கலைக்கு வெளியில் நின்றுகொண்டு கலையை அலசி ஆராயும்போது அவருக்குச் சிறிது அச்சம் இருக்கவேண்டும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். கலையையும் மனித இயல்பையும் கணித ரீதிப்படி அளந்து கூறிவிட்டதாக இன்று சிலர் சொல்லிக் கொள்ளுகிறுர்கள். அது எவ்வளவு தப்பு என்பதற்குத் தங்கள் விமர்சனம் ஒரு சான்று.

'புத்தம் வீடு' ஆசிரியர் எழுதிய முதல் நாவல் என்பதற்காக அதற்கு அனுதாபம் தேவையில்லை என்று நினைக்கிறேன். இது அவருடைய முதல் நாவலாக இருக்கட்டும், கடைசி நாவலாக இருக்கட்டும், ஏதாவது சிறப்பிருந்தால் இருக்கிறது என்று சொல்லுங்கள். இல்லையென்றுல் பள்ளிக்கூட ஆண்டு மலரில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் சிறுமியின் முதல் படைப்பாகக் கருதி அந்தக் காரணத்தால் இதைச் சிறப்பிக்கவேண்டியதில்லை.

நான் இந்தக் கடிதம் எழுத வந்த நோக்கம் இதுதான். தங்கள் விமர்சனத்தில் காணப்பட்ட பிழைகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டவேண்டும் தங்களுடைய சில அவசரமான முடிவுகளையும் குறிப்பிடவேண்டும் என்று எண்ணினேன், சுருக்கமாகத்தான்.

முதலாவது இந்த நாவலாசிரியர் தமிழ்ப் பேராசிரியர் அல்ல, ஆங்கிலப்பேராசிரியர். இரண்டாவது இற்செறிப்பு என்பது பிரதேச வழக்கு அல்ல, பழைய இலக்கிய இலக்கண வழக்கு. மூன்றுவது, நாவலில் மூன்றும் பார்வை மாத்திரமல்ல, வேறு பார்வைகளும் இருக்கின்றன, முக்கியமாக லிஸியின் பார்வை. நான்காவது, லிஸியின் தந்தை தற்கொலை செய்துகொள்ளவில்லை.

இனி உங்கள் முடிவுகளைப்பற்றி. அப்பட்டமாகச் சொல்லப்போனல், இது ஒரு காதல் கதை என்கிறீர்கள். கதையில் காதல் சித்திரிக்கப்படுகிறது உண்மைதான். ஆனல் காதல் சரடு இடையே அற்றல்லவா கிடக்கிறது? வகுப்பு வேற்றுமை உணர்வும், வீண்பெருமையுமல்லவா கதையின் ஊடே ஒரே இழையாகச் சென்று, கதைக்கு ஒருமையுணர்ச்சியைத் தருகிறது? இந்த விஷயம் நீங்கள் சொல்வதுபோல், தமிழ் நாவலுக்கும் சிறுகதைக்கும் அப்படி யொன்றும் பழகிப்போன விஷயமல்லவே?

ஒரு அத்தியாயத்தைப் புத்தகத்திலிருந்து எடுத்து விட்டால் என்ன என்பது தங்கள் கேள்வி. இது தேவையா தேவையற்றதா என்பதை முன் பின் பகுதிகளோடு கதையின் முக்கியமான இழையோடு, சேர்த்துப் பார்த்தால் தெரிந்துவிடும். கொலை, விசாரணை என்ற சம்பவங்கள், முன் சம்பவங்களின் இயல்பான தொடர்புகளே. பனைவிளைச் சூழ்நிலையில் சாதாரணமாக நிகழக்கூடியவைகளுந்தான். இங்கே சம்பவங்களை மிகைப்படுத்தாமல் அவற்றின் காரண காரியமான மன நிலைகளுக்கு முதலிடம் கொடுத்திருப்பதையும் கவனிக்கவேண்டும். எனவே உளப்போக்கு ரீதிக்கும் ஒரு குந்தகமும் விளையவில்லை என்பேன்.

உபதேசியார் துப்புத் துலக்கி தங்கராஜை விடுவித்து வழிசெய்கிறுர். அதனல் 'ஏசுநாதர் அருளிருந்து அவர்களைச் சேர்த்து வைக்கிற மாதிரி தான்' என்கிறீர்கள். இந்த உபதேசியார் செய்து முடித்தார் என்றுல் முந்தின உபதேசியார் தலையிடவே முடியாதென்று சொல்லிவிட்டாரே? இந்த உபதேசியார் தங்கராஜை விடுதலை செய்தாலும், வைத்தியர் துணையில்லாமலிருந்தால் கல்யாணமே நடந்திருக்காதே? சமூக ஊழியம் செய்வதே கிறிஸ்துமதம் என்று உபதேசியாரே நினைக்கும்போது தங்கராஜை விடுவித்த உபதேசியாரை ஏசுநாதரின் அருளுக்கு அடையாளமாக நீங்கள் எடுத்ததில் வியப்பில்லை. இதெல்லாம் கதையைக் காதல் கதை என்று சரித்துப் பார்த்ததின் விளைவு என்றுதான் சொல்வேன்.

பாத்திரங்கள் திடமான அழுத்தமான பாத்திரங்கள் அல்ல என்பதும் மிக அவசரமான முடிவென்றே தோன்றுகிறது. என்னைக் கேட்டால், முதலாவது கண்ணப்பச்சி, இரண்டாவது குடிகாரன், மூன்றுவது லிஸி கச்சிதமான படைப்புகள் என்று சொல்வேன். மற்றப் பாத்திரங்களுக்கும் தனித்துவ முத்திரை விழுந்தே யிருக்கிறது. பழம் பெருமை எல்லாம் தேய்ந்து ஓய்ந்துபோன ஒரு பூர்வீகக் குடும்பத்தின் வீண்பெருமைக்குச் சின்னம் கண்ணப்பச்சி. அவருடைய கால்கள் பெஞ்சுக் கடங்காமல் நீண்டு கிடக்கின்றன. அவர் உட

தும் உள்ளமும் எல்லாமே தளர்ந்துவிட்டன. கொஞ்ச நஞ்சம் மீதியிருக்கும் குடும்பப் பெருமைக்கும் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கும் இரண்டு பொல்லாத குடிகாரப் பிள்ளைகளுக்கெதிராக அவர் என்னசெய்யமுடியும்? தன் கோபத்தைத்தான் கிழட்டு மனைவியிடம் காட்டலாம். காறித் துப்புதல் மூலம் வெளியிடலாம் ஏழைப் பணியேற்றுத் தொழிலாளி தங்கையனிடம் தன் பழம் பெருமையைக் காட்டி, இனி அவன் தனக்குப் பணியேற வேண்டாம் என்று விரட்டி விடலாம். உலகத்தில், தன் பாசமெல்லாம் சொரிந்து வைத்திருந்த லிஸியும் கூடத் தன் பெருமையைத் தகர்த்துவிட்டதாக அறிந்த ஏமாற்றத்தோடு, கொளுத்தும் வெயிலில் வைத்தியர் வீட்டுக்குத் தள்ளாடி நடந்த சென்றபோது லிஸி கூறிய இரக்க மொழிகளுக்குப் பதிலாக 'கிளவனெப்பத்திக் கவலையா உனக்கு' என்று சொன்ன வார்த்தைகள் அவர் பெருமையும் இருதயமும் உடைந்து வந்த வார்த்தைகள் அல்லவா? இதை விடப் பாத்திரம் எப்படித்தான் திடமாக இருக்க வேண்டுமோ?

கடைசியாக ஒரு வார்த்தை, 'பத்தாம் பசலி' முறைகளும் அறுபது முறைகளும் பற்றி. அறுபது முறைகளும் எழுபது எண்பதுக்களில் பத்தாம் பசலிதான். புதுமை மோகத்தினால் விளைந்த வேகத்தை இந்த வார்த்தையில் காண்கிறேன்.

கடிதம் நீண்டுவிட்டதோ என்று பயப்படுகிறேன். இதை உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கும்படியாக வேண்டிக்கொள்ளுகிறேன். சவுகரியமில்லையென்றால் பதில் எழுதுவீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

செ. ஜேசுதாசன்
தமிழ்ப் பேராசிரியர்,
யூனிவர்ஸிடிகாலேஜ், திருவனந்தபுரம்

பதில்

தமிழ் பேராசிரியர் செ. ஜேசுதாசன் அவர்களுக்கு

தங்கள் கடிதம், என் விமர்சனக் கட்டுரைக்கு விமர்சனமாக, ஒரு கட்டுரைக்கு பதிலாக எனக்கு நேர் கடிதம் மூலமாகவே உங்கள் கருத்துக்களை தெரிவித்திருக்கும் ஒரு முறையை கையாண்டிருக்கிறீர்கள். எனவே நானும் கடிதமாகவே எழுதுகிறேன். உங்கள் கடிதத்தின் முதல் இரண்டு பாராக்களைப்பற்றி (அவை என் தகுதி, துணிச்சல் பற்றியவை) முடிவில் குறிப்பிடுகிறேன். முதலில் என் பிழைகள் அவசர முடிவுகள் சில பற்றி பார்க்கலாம்.

இந்த நாவலாசிரியர் தமிழ் பேராசிரியர் இல்லை, இங்கிலீஷ் பேராசிரியர் என்று பிழையை திருத்தி இருக்கிறீர்கள். ஏற்றுக்கொள்கிறேன். பிழை பிழைதான். நான் தமிழ் பேராசிரியர் என்று அழுத்தியதுக்கு காரணம் அவர் 'பெலமாக' என்ற கொச்சைச் சொல்லை தெரிந்து உபயோகித்திருக்கிறார் என்று சுட்டிக்காட்டவே. அடுத்து, 'அவள் விலையைக் குறைப்பதாகும்' என்று தமிழ் மரபுக்கு ஒத்தது என்று இடம் தரப்படாத ஒரு வாக்கியத்தை எழுதியிருக்கிறார் என்றும் சுட்டிக் காட்ட. இப்போது அவர் இங்கிலீஷ் பேராசிரியர் என்பதனால் என் வாதம் பலவீனப்பட்டுவிடவில்லை. மாறாக இன்னும் அதிக வலுப்படுகிறது, எனக்கு சாதகமாக. ஒரு இங்கிலீஷ் இலக்கிய பரிச்சயம் உள்ளவர், பிறமொழி இலக்கியங்களின் போக்கை அறிந்தவர் தமிழில் தான் படைக்கும் இலக்கிய உருவத்தில் இவைகளை கையாளுகிறார் என்றால்! தமிழ் இலக்கியம் மட்டும் படித்து, பரிச்சயம் உள்ளவர்கள் இவைகளை கையாளுவார்களோ மாட்டார்களோ, தமிழுக்கு இது சேரக் கூடியது, வேண்டியது என்று அவர் முடிவுகட்டி உபயோகித்திருக்கிறாரே போதுமே ஆனால் நாவலாசிரியர் இங்கிலீஷ் பேராசிரியர் என்பது பட்டரீதியாக உத்யோகமாக இருந்தாலும் அவர் தமிழ் பேராசிரியராகவும் கருதும்படியான தகுதியை பெற்றிருக்கிறாரே. நீங்களும் அவரும் சேர்ந்து எழுதி உள்ள 'தமிழ் இலக்கியசரித்திரம் (எ ஹிஸ்டரி ஆப் தமிழ் லிடரேச்சர்) என்ற நூலில் தமிழ் இலக்கியத்தில் அவருக்குள்ள பரிச்சயத்தையும், அதோடு ஆராய்ச்சி மனப்பான்மையையும் வெளிக்காட்டுவதிலிருந்து அவரை தமிழ் பேராசிரியர் என்றும் சொல்லி இரட்டைப் பெருமை அவருக்கு கிடைக்கச்செய்வதை நீங்கள் ஆட்சேபிக்க மாட்டீர்களோ?

அடுத்தபடி 'இற்செறிப்பு' சொல்பற்றி. அது பழைய இலக்கிய இலக்கணவழக்கு என்றுதிருத்தி, பிரதேச வழக்கு இல்லை என்கிறீர்கள். நாவலிலேயே 'இற்செறிப்பு ஒரு பழந்தமிழ் வழக்கம், சங்க காலத்திலேயே உள்ள வழக்கம்' என்று இருக்கிற வரிகளை படித்த பிறகே அது பிரதேச வழக்காக இருக்கக்கூடும் என்று அநுமானித்து எழுதினேன். 'இற்செறித்தல்' என்றால் 'வீட்டில் இருத்துதல்' என்று அர்த்தம்கொண்டு செந்தமிழ் அகராதியிலும் இருக்கிறது. சரி, அதனால் என்ன? எத்தனை பழய இலக்கிய இலக்கண வழக்குச்சொற்கள் நாம் அறியாமல் பேச்சு வழக்கில் இருக்கின்றன. அதுவும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில்? அன்று நான் கூட்டத்தில் இந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரியுமா என்று கேட்டபோது ஒருவர் கூட இதை சொல்ல முடியவில்லையே. அதனால் இற்செறிப்பு என்ற சொல் மற்ற சிலதைப்போல இன்றும் அங்கு பரிச்சயமான சொல்லாக இருக்கக் கூடும் என்று நான் யூகித்தேன். இப்போது நீங்கள் சொல்வதை கொண்டு அங்கு அது பிரதேச வழக்கில் இல்லை என்று வைத்துக்கொள்வோம். அப்போது ஆசிரியர் அந்த பழக்கத்தில் எங்கும் இல்லாத பழய சொல்லை வலிந்து உபயோகித்திருக்கிறார் என்றுதான் எடுத்துக் கொள்ளவேண்டும் வயது வந்த பெண்கள் வீட்டைவிட்டு போகக்கூடாது என்ற ஒரு இயற்கையான, பழக்கத்திக்கு ஆசிரியர் தன் 'சங்க கால வழக்கமான 'இற்

செறிப்பு' பற்றி பிரஸ்தாபிக்கத் தேவையே இல்லையே. சங்க கால வழக்கமும் தெரியாமல் அதற்குள்ள தமிழ் ஞானமும்' இல்லாமல் 'தலை முறை தலைமுறையாக' வரும் வழக்கம் மட்டும் நன்றாகத் தெரிந்த பணிவிளைப் புத்தம் வீட்டாரின் செய்கைக்கு சங்க, பழந்தமிழ் வழக்குச் சொல்லை, ஆராய்ச்சி செய்த விளக்கமாக, ஏற்கெனவே நன்ருக விளங்கிவிட்ட ஒரு தகவலுக்கு இந்த சொல்லை புகுத்தி பொருள்விளக்கி நச்சுப்பண்ணுவானேன்? ஆசிரியர் கட்டுரை எழுதவில்லையே.

மூன்ருவதாக 'நாவலில் மூன்ரும் பார்வை மாத்திரமல்ல, வேறு பார்வைகளும் இருக்கின்றன முக்கியமாக லிஸியின் பார்வை,' என்று எழுதி இருப்பது. இந்த வரிகளை நீங்கள் எழுத எப்படி ஏற்பட்டது, என் கட்டுரையின் எந்த கருத்துக்கு இந்த பதில் என்று என் கட்டுரையில் மீண்டும் படித்து தேடினேன். என் கட்டுரையில் எங்கும் நான் 'மூன்ரும் பார்வை' என்று நாவலில் வரும் ஒரு குறிப்பிட்ட கதா பாத்திரத்தின் பார்வையை அழுத்திச் சொல்லவே இல்லையே. முதல் பார்வை இரண்டாம் பார்வை என்றுகூட நான் பிரஸ்தாபிக்கவில்லையே. அப்படி இருக்க நீங்கள் எதைக் கொண்டு வேறு பார்வைகள், முக்கியமாக லிஸியின் பார்வை என்று எதுக்காக 'சொல்ல வருகிறீர்கள் ?

எனக்கு ஒரு சந்தேகம். என் கட்டுரையில் 'இந்த நாவல் புறப்போக்கான கதை சொல்லல் வழி பின்பற்றியது. மூன்ரும் மனிதப் பார்வை நாவல். ஆசிரியர் கதையை தடம் தவருமலும் ...' என்று எழுதி இருக்கிறேன். இந்த மூன்ரும் மனிதப் பார்வை நாவல்' என்பதை கொண்டுதான் நீங்கள் மேலேகண்ட வரிகளை எழுதி இருக்கக் கூடும் என்று நினைக்கிறேன். 'இந்த் வார்த்தைகளைத் த்விர வேறு எந்த இடத்திலும் மூன்ரும் பார்வை என்ற கருத்து }வெளியிடப்படவில்லை. இந்த வரிகளை மறுபடியும் படித்தால் தெரியும். இங்கே நான் குறிப்பிடுவது நாவலின் உருவ உத்தி வகைபற்றி, கதை சொல்லல் வழிபற்றி இரண்டு வாக்கியங்களையும் சேர்த்துப் பார்க்கிற யாருக்கும் புரியும் 'நான்' என்று சொல்லுகிற தன் பார்வையான கதை சொல்லல் வழியில் இல்லாமல் புறப்போக்காக அவன் என்று மூன்ருமவன் பார்வை வ்ழியில் சொல்லும் உத்தியைத்தான் குறிப்பிடுகிறேன் என்று புரியும். நீங்கள் பாதை தவறிவிட்டீர்கள்.

அடுத்தப்படியாக 'லிஸியின் தந்தை தற்கொலை செய்து கொள்ளவில்லை...' என்பது. மற்ற மூன்றையும்விட இது முக்கியமான விஷயம். கதையில் வரும் ஒரு நிகழ்ச்சிபற்றி இரண்டு பாடந்தரம் இருப்பதா ? இருக்க முடியாது. நிச்சயமாக யாரோ ஒருவரின் பார்வையில் முடிவில் கோளாறு. என் பார்வையின் முடிவில்தான் கோளாறு என்று சொல்லாமல் சொல்லிவிட்டீர்கள். சரி அப்படியானுல் உங்கள்கட்டுரையில் 'வேறு எப்படி அவன் இறந்தான் என்று சொல்லும் ஒரு வாக்கியம் சேர்த்து விளக்கி (இங்கிலீஷ் பேராசிரியர் என்று குறிப்பிட்டதுபோல்) இருந்தால் முடிவை ஒப்பிட்டுப்பார்த்து தப்பானுல் திருத்திக்கொள்ளவும் உபயோகமாக இருந்திருக்கும். நீங்கள் சொல்லவந்ததை முடிக்காமல் புள்ளிகள்போட்டு மேலே ஏதோ இன்னும் இருப்பதுபோல் காட்டி நின்றுவிட்டீர்கள். ஏன் !

எனக்குத் தோன்றுகிறது உங்களுக்கே ஏதோ நிச்சயமில்லை என்பதுபோல. ஆய்வு விமர்சனம் என்பதே நுட்பமாக தகவல்களை ஆராய்ந்து பார்ப்பது. அந்த வழியில் ஏற்பட்ட ஒரு கருத்தை மறுக்க முற்படும்போது, அதே ரீதியில் ஆதாரங்களை தரவேண்டும். ஏதோ என் முடிவை மறுத்துவிட்டீர்கள். அப்புறம் என்ன, புதிரா ? தற்கொலை இல்லை என்ருல், கொலை, தற்செயல் விபத்து மரணம் திடீர் இயற்கை மரணம். இப்படி எதாவது தானே இருக்கவேண்டும் அந்த ஒரு தகவலை சொல்ல நீங்கள் தயங்கியது ஏன் ? இல்லை மர்மக் கதையா ? துப்பறிபவர்களை தேடவேண்டுமா ? முதலில் ஒரு கருத்தைச் சொல்கிறவனைவிட மறுக்கிறவனுக்கு பொறுப்பு அதிகம் போகட்டும் நீங்கள் சொல்லாவிட்டாலும் என் முடிவுபற்றி நான் சரி, தப்பு பார்த்துக்கொண்டாகவேண்டும். நீங்கள் மறுத்துவிட்டபிறகு.

நாவலுக்குப் போவோம். விடியும் முன் கொலை நடந்துவிட்டது. பொழுது புலர்ந்ததும் போலீசார் வந்து புலன் விசாரித்து தங்கராஜை கைது செய்து போகிருர்கள் நன்ருக விடிந்தபின் லிஸியின் தகப்பனும் கைதான செய்தி லிஸிக்கு எட்ட,வீட்டு பின் வாசலுக்குப்போய் உட்கார்ந்து கொலை செய்தது யார் என்று குழம்பிக் கொண்டிருக்கும்போது (கொஞ்ச நேரம் கழித்து) அப்பன் ஜாமீனில் வீடுதிரும்பி 'அதுஅவனப் (தங்கராஜை) பாடம் படிக்க பள்ளிக்கூடத்திலே சேத்திற்று நான் வந்தேன் எப்படி, கிளவி, நல்லாருக்கா' என்று பெருமை பேசிவிட்டு தூங்கிப்போய் விடுகிருன். லிஸியும் வாசலில் போய் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது (கொஞ்ச நேரத்தில்) செல்லப்பன் வந்து பேசிவிட்டுப் போகிருன். வீட்டுக்குள் லிஸி புகவும் செல்லப்பன் பேசிவிட்டுப் போனதை பார்த்திருந்த குடிகார அப்பன் அவள்மீது சீறி விழுகிருன். அப்போது வைத்தியர் வரவும் 'கேஸ் நமக்கு சாதகமாக இருக்கும்னு தோணுது' என்று அவர் சொல்ல இருவரும் லிஸியின் தாத்தாவிடம் சென்று (ஏதோ) பேசுகிருர்கள். வைத்தியர் போனபின் லிஸியின் குடிகார தந்தை மறுபடியும் அவளிடம் வந்து தன் மானத்தை கெடுப்பதைவிட அவளை சாகச் சொல்லி ஆத்திரமாக பேசவும் 'லிஸி' துணிந்து அப்பாவிடம் பேசி அப்பனுக்கு குறைச்சல் உண்டாக்கி வைக்க மாட்டேன் என்று முகத்தில் அடித்தமாதிரி பேசுகிருள். அப்போது தாத்தா கூப்பிட அவர்கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டு உள்ளே போய்விடுகிருள். லிஸி சிந்திக்கிருள். இவர்கள் எல்லோரும் தங்கராஜ்தான் கொலையாளி என்று நம்புகிருர்கள் அப்பனையும் அவளையும்தவிர. அவர் படுத்திருக்கி

றார். அவள் முகத்தில் விழிக்க விருப்பம் இல்லை யோ என்னமோ. . .சித்தப்பாவை 'அப்பாதான் கொன்றிருக்கிறார் . . தந்தை செய்த குற்றத்தை தங்கராஜ் மேல் சுமத்தப்பார்க்கிறார்கள்' இப்படி சிந்தித்துக்கொண்டு இருந்ததால் அன்றிரவு லிஸி தூங்கவில்லை.

இனிதான் கதையின் போக்கை நுட்பமாக கவனிக்கவேண்டும். புத்தக வரிகள் இவை:

'பகலில் தூங்கினதாலோ, என்னவோ அவள் தந்தையும் புரண்டு புரண்டு படுப்பதும் முனகு வதுமாக இருந்தார் (தூங்காத லிஸி தந்தையை கவனித்து வந்திருக்கிறாள்)

'அதிகாலையில் சற்றுக் கண்ணயர்ந்தவள் உள் திண்ணையிலிருந்து லிஸியம்மா என்ற கம்மின குர லைக்கேட்டு விழித்து அவன் தந்தையிடம் ஓடிச் சென்றாள்.'

'அவரது முகரூபம் முற்றிலும் மாறிப் போயி ருந்தது. பேச நாவெடுக்கும்போது வாயிலிருந்து சிவந்த நுரை தள்ளிற்று.'

'வைத்தியர் வருமுன் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. உணர்வு தவறும் நிலை. எதே தோ பிதற்றுகிறார். இடையிடையே பொருள் விளங்காமலுமில்லை.'

'குட்டி நான்தான் கொன்னேன் பாரு. அதுக் கிப்ப உனக்கு என்னவாம் ?'

'ஏ கிளவி ! நீ என்ன கண்டே. வெட்டொ ண்ணு, துண்டம்ரண்டு, என்று பல்லை இளிக்கிறார்.'

'காய்கறி அரிஞ்சான் காய்கறி. நான் தலையை அரிஞ்சிற்றேன் ! அருவா எப்படி நைஸா வெட் டுது தெரியுமா ?' (நினைவின்றி)

வைத்தியர் வரவும் இதேமாதிரி நினைவும் உள றலும்.

'அவன் மக அவனுக்கு மேலு (கொஞ்சம் நினை வுடன்)

'ஏ நான் உறங்கப்போறேன். நல்லா உறங் கப்போறேன். நீ எழுப்பினாலும் முளிக்காமந் தான் உறங்கப்போறேன். எம் பிள்ளையைக் கூப் பிடு. லிஸியம்மா !'

'வந்தியாம்மா மகளே, நீ கொலைகாரப் பய லுக்க மகதான். ஆனா நீ நல்லவ !' (நினைவுடன்)

'இப்ப பேசட்டும் மகளே...இனிஉனக்குபயமில் லே. வாம்மா.'

'நான் உன்னெ ஆசீர்வதிக்கல்லேம்மா, என் கையிலே அளுக்கு இருக்கு. இந்த குடிகாரன் போனபிறகு கண்ணப்பச்சி ஆசீர்வாதம் வாங்கிக்க (நினைவுடன்). என் மகளுக்கு திருவனந்தபுரத் திலேருந்து மாப்பிள்ளே வரான்டா (நினைவு தடு மாறி) பிறகு உபதேசியார் வருகிறார். இனம் கண்டு.

'ஏ ஓதை, என்னெ மோச்சத்துக்கு...' (நினைவு தடுமாறி)

இதுக்குப் பிறகு அவன் பேசவில்லை. இறந்து விட்டான். கொலை செய்தவனின் முடிவு பற்றிய தகவல் நாவலில் இவ்வளவுதான். நான் தற்கொலை செய்து கொண்டதாக குறிப்பிட்டேன். அவன் தற்கொலை செய்துகொண்டதாக தகவல் எதுவும் கதையில் இல்லைதான். இந்த ஆசிரியரின் எழுத் துப் போக்கிலே இதுபோல் பலஇடங்களில் தகவல் நேராகச் சொல்லப்படவில்லை. உதாரணத்துக்கு. விடியற்காலை நான்கு மணிக்கு பனையேறிகள் தங் கள் வேலையை துவக்கிய சமயம் புத்தம் வீட்டுக்கு அருகில் உள்ள பனையின் உச்சியிலிருந்து 'குடிகெட் டுப்போச்சு' என்று திரும்பத் திரும்ப கூவிக்கத்தின அன்பையன் ஓடிவந்தவர்கள் கேட்டும் எதுக்காக அலறினான் என்று அந்த சம்பவ நிகழ்ச்சி முடியும் வரை தெரியவே இல்லை. பொழுது புலர்ந்தபின் போலீஸார் வந்த தகவலுக்குப்பின்தான் கொலை செய்யப்பட்டவனின் (லிஸியின் சிற்றப்பாவின்) முண்டத்தைப் பற்றிய பிரஸ்தாபமே வருகிறது. இதுக்குப்பின்தான் அன்பையன் அலறல் இதுபற் றியதாக இருக்கும் என்று அனுமானிக்கத்தோன் றுகிறது. (ஒருவேளை அன்பையன் அலறல் இது சம்பந்தமாக இல்லை. வேறு ஏதோ என்று நீங்கள் என் முடிவு தவறானது என்று கூறிவிடுவீர்களோ?)

சரி இது தற்கொலை இல்லாவிட்டால் வேறு என்ன ? கொலையா? காயப்படுத்தி கொலை, இல்லை விஷம் வைத்தா ? அவன் மனைவி லிஸி இருவர் தான் கூட இருந்தவர்கள். அவர்கள் செய்திருக்க மாட்டார்கள். அது போகட்டும் படுக்கப்போகும் போது சரியாக இருந்ததாக கொண்டால் லிஸ்ஸி போய் பார்க்கும்போது முகம் ரூபம்மாறி சிவந்த நுரை (ரத்தம்) தள்ளி இருப்பானேன் ? திடீர் மாரடைப்பா ? ஹெ ம ரே ஜ் ? பக்கவா தம், வலிப்பு, அதிர்ச்சியில் சித்தக்கலக்கம்? எதால் அவன் மரணம் சிலமணி நேரத்துக்குள் ஏற்பட்டி ருக்கக்கூடும்? மேலே குறிப்பிட்டவை எது மூல மும் அவன் சாகவில்லை. ஏனென்றால் அதுக்கு வேண்டிய சூசனைத் தகவல்களும் கிடையாது. இல்லை எதாவது பேய் அறைந்ததாக சொல்லலா மா ? அது நம்பிக்கை சம்பந்தப்பட்டதாயிற்றே !

ஆக, தற்கொலை இல்லை என்றால் மரணத்துக்கு காரணம் வேறு எதுவும் தரப்படவில்லை. தற் கொலை என்ற அநுமானத்துக்குத்தான் அதிகபட்ச தகவல் இருக்கிறது. கொலைகாரனுடைய மனநிலை, பேச்சு எல்லாம் அவன் ஜாமீனில் வந்ததிலிருந்து தான் தெரிகிறது. ஜாமீன் தந்தது யார் தெரியு மா ? நான்தான் தடிபோல வந்தாச்சே' 'அவ ளைப் பாடம்படிக்கப் பள்ளிக்கூடத்திலே சேத் திற்று நான்வந்தேன்' என்று பெருமை பேசுகிறான்

(இதன் தொடர்ச்சி 237 ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# மயக்கம் தெளிந்தது

## ம. சீ. கல்யாணசுந்தரம்

'வாருங்கள், உட்காருங்கள்..... யார், தெரியவில்லையே!' என்று தயங்கிக்கொண்டே சோமநாத பிள்ளை 'நாம் இதற்கு முன்பு சந்தித்திருக்கிறோமோ?' என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

வந்த இருவரில் ஒருவர்-'நான் இவ்வூர்த் தமிழ்ச் சங்கத்தின் காரியதரிசி. சங்கரய்யர் என்று அழைப்பார்கள். (புன் நகையுடன் தம்கூட வந்திருப்பவரை அரைப்பார்வை பார்த்துக்கொண்டு) 'தமிழ்ப் பைத்தியம்' என்ற பட்டப்பெயரும் உண்டு. இவர் சங்கத்தின் ஒரு ஊக்கமான உழைப்பாளி. சுப்பராய முதலியார் என்று கேள்விப்பட்டிருக்கலாம். பிரபல வியாபாரி. 'இவருடைய தொழிற்சாலையில் பின்னப்படும் பனியன்கள் வட இந்தியாவில்கூட விற்பனையாகின்றன'என்று தெரிவித்தார்.

உலக அனுபவத்தையே தம் வியாபாரத்தின் மூலதனமாகக்கொண்ட சோமநாதபிள்ளை சங்கரய்யரை வியப்புடன் கவனித்தார். அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும்போதே ஒரு பழைய நண்பன்போல் சகஜமாய்ப் பேசுவதும், சாதாரண விஷயங்களில்கூட அவர் காண்பித்த விசேஷ ஆவலும் உற்சாகமும், இனிய குரலின் நெகிழ்ச்சியும் ஏற்றத்தாழ்வும் குழைவும் அவர் மனதில் ரசமான படங்களாகப் பதிந்தன. 'இவரை நம் கம்பெனியில் ஒரு ஏஜண்டாக நியமிக்க முடியுமானால்!' என்று அவர் கற்பனைசெய்து பார்த்தார். அவர் 'முன்னணி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி' யின்பஞ்சாப் மாகாணத்து ஆர்கனைஸர்; இதைமுன்பே சொல்லியிருக்கவேண்டும்

சுப்பராய முதலியார்-'உங்களைப்பற்றி நாங்கள் ரொம்பக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஊருக்கு வந்திருக்கிறீர்கள் என்று தெரியவந்ததும் பார்த்துவிட்டுப் போகலாமென்று...'என்று சொல்லுகையில், சோமநாதபிள்ளை புன்முறுவலுடன்' என்னைப் பற்றி நீங்கள் என்ன கேள்விப்பட்டிருக்கக்கூடும்! நான் பிரபல அரசியல் வாதியல்ல, சினிமா நட்சத்திரமோ அல்லது கோமாளியோ அல்ல, ஒருவாரம் பூமியில் புதைந்து கிடக்கும்யோகியுமல்ல என்று விளையாட்டான ஆட்சேபம் கிளப்பினார்.

முதலியார் இடைமறித்து 'உங்கள் மானேஜிங் டைரக்டர் எம். டி. செட்டியார் எனக்குப் பழக்கமானவர் 'எம்ப்டி' (காலி) சட்டி என்பது எங்களுடைய அந்தக் காலத்து ஹாஸ்யம்] நாங்கள் சேர்ந்து படித்தவர்கள் சேர்ந்து படிக்காதிருந்தவர்கள் என்பது எங்கள் பெற்றோரின் குற்றச்சாட்டு! ஸ்டான்லி துரை ப்ரின்சிபாலாக இருந்த காலத்தில் 1887-88-ல் செட்டியார் உங்களைப்பற்றி அடிக்கடி சிலாகித்துச் சொல்லியிருக்கிறார். இன்ஷியூரன்ஸ் தலைமை ஆபீசுகளும் கிளை ஆபீசுகளும் மலிந்து கிடக்கும் அந்தப் பஞ்சாப் மாகாணத்தில் 'முன்னணி'க்காக நீங்கள் செய்துவரும் பிரசாரமும் அடையும் வெற்றியும் பிறருக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று அடிக்கடி சொல்வார்,' என்று பாராட்டிப் பேசினார்.

தம்தம் தொழிலைப்பற்றியும் பொது விஷயங்களைப் பற்றியும் மூவரும் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு சங்கரய்யர் பிள்ளையைப் பார்த்து—'இந்த நம் சங்கத்தின் நிலைமைதான் மிகக் கவலைக்கிடமாக இருக்கிறது மக்களின் ஆதரவு வேண்டிய அளவில் கிடைப்பதில்லை மாணுக்கர்களும் முன்போல வருவதில்லை. சந்தா நன்கொடை வசூலும் திருப்திகரமாக இல்லை. நான்கு இடங்களுக்குப்போய் அவ்வூர்ப்பெரிய மனிதர்களை முன்னை நிறுத்திப் பிரசாரம் செய்து கொண்டே இருந்தால்தான் பணம் கிடைக்கும். ஆனால் பையில் பணம் இருந்தால்தானே தைரியமாய் வெளியே கிளம்பலாம்! ஸ்வர்ணலக்ஷ்மி அல்லது காகித லக்ஷ்மி பெட்டியை விட்டு வெளியேறிவிட்டால் தைரியலக்ஷ்மி ஹிருதயத்திலும் நாக்கிலும் இருந்து கம்பியை நீட்டிவிடுகிறாள்,' என்று சொன்னார்.

இவ்வளவு நேரம் கலகலப்பாய்ப் பேசிக்கொண்டிருந்த சோமநாதபிள்ளை சட்டென்று பரிகாசப் பார்வையோடும் மாறிய குரலோடும் 'இந்தச் சங்கம் எதற்காக நடந்து வருகிறது.' என்று வினவினார்

சங்கரய்யர் தமிழ்ச் சங்கம் எதற்காகவா? தமிழ் அபிவிருத்திக்காக.

பிள்ளை : அதாவது ?

சங் : சீர் கெட்டிருக்கும் தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்காக.

பிள்ளை : இல்லை..., வியாபார அபிவிருத்தி என்றால் எனக்குப் புரிகிறது. முன்னைவிடக் குறைந்த செலவில் அதிகமான பொருள்கள் விளைவித்தல், கட்டிப்போட்டு வைக்காமல் வேகவேகமாக விற்றல், கிடைத்த லாபத் தொகையை பாங்கு பாஸ் புஸ்தகத்தில் கண்டு மகிழ்தல், அல்லது உற்பத்தியை மேலும் அதிகரிக்கத் தொழிலில் மறுபடி ஈடுபடுத்துதல் இது என் புத்திக்கெட்டிய விஷயம். மற்றப்படி பாஷை அபிவிருத்தி, கலை மறுமலர்ச்சி, மத புனருத்தாரணம் என்றால் 'என் பாங்குத்

தொகையைக் குறைப்பதாகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஓட்டுணி அல்லது புல்லுருவி ஸ்தாபனங்கள்' என்றுதான் 'என் மனத்தில் படுகிறது. இவ்விஷயங்களில் நானும் ஒரு மரக்கட்டையும் சமம்; இப்படியிருக்கிறேமே என்று எனக்கு வெட்கமோ கவலேயோ இல்லே. ஆனுல் என் சொற்களாலோ பேச்சு முறையாலோ உங்கள் மனம் புண்ணடைந்தால் மன்னிக்கவேண்டும். (பிறகு ஆங்கிலத்தில்) மண்வெட்டியைக் குறிப்பிட்டு 'தினசரி உபயோகத்திலிருக்கும். ஒரு விவசாயக் கருவி' என்று சொல்லும் இனத்தைச் சேர்ந்தவனல்ல நான். மன்னிக்கவும்.

முதலியார்-படித்தவர்கள், அநுபவசாலிகள், பல ஊர் பார்த்தவர்கள் இப்படிப் பேசுவது அழகல்ல. நானும் வியாபாரிதான். அத்துடன் கலே, இலக்கிய அபிவிருத்தியிலும் எனக்குப் பற்றுதல் இருக்கிறது. இதுபோன்ற சர்ச்சையில் ஸ்தூலமான காரண காரிய தொடர்புக்கும் லாபநஷ்ட சதவிகிதக் கணக்குகளுக்கும் இடம் இல்லே என்பது என் தாழ்மையான அபிப்ராயம். நெல் வியாபாரத்தைக் காட்டிலும் ரோஜாப்பூ வியாபாரத்தில் கால் வட்டி அதிகம் என்று கணக்குப் போட்டுப் பார்த்து, கிருஷ்ணு, கோதாவரி, காவேரி டெல்டாக்கள் முழுதிலும் நெல்லுக்குப் பதிலாக ரோஜாச் செடி பயிர் செய்யும் ஒழுங்கான யோசனேயைக் காட்டிலும், சொப்பனத்தில் கண்ட ஒரு ரோஜாப்பூவைக் கொண்டுவருவதற்காக ராஜகுமாரன் ஏழு மலேகளும் ஏழு கடல்களும் தாண்டிச் சென்று பத்து வருஷம் அலே அலே என்று அலேகிருன், அந்தப் பைத்தியக்கார யோசனே எனக்கு அதிகம் பிடித்திருக்கிறது.. என்ன, அப்படி மந்தஹர்சத்துடன் பார்க்கிறீர்கள்? மிகைப்படுத்திக் கூறுகிறேன் என்ரு? விஷயத்தைத் தெளிவாக்கத்தான் சற்று அதிகப்படுத்திச் சொன்னேன்.

பிள்ளே (சிரித்துக்கொண்டே) அதனுல் பாதகமில்லே மிகைப்படுத்துதல் கவிதையில் ஏற்பட்ட ஒரு அலங்காரம்தானே! கலே அபிமானியாகிய தாங்கள் அலங்காரங்களேக் கையாளுவதும் நியாயம்தான். அது போகட்டும் 'தமிழ் அபிவிருத்தி' என்கிறீர்களே, அதற்காக நீங்கள் செய்வது என்ன என்று குறிப்பாகச் சொல்ல முடியுமா?

சங்: பழைய நூல்களேத் தேடிப்பிடித்து, ஆராய்ந்து, காப்பாற்றி அல்லது பிரசுரித்து, அவற்றின் சிறப்புக்களே மக்களுக்கு எடுத்துக் காட்டுதல்; அரிய பழைய பிரசுரங்களே மறுபடி அச்சிட்டுக் குறைந்த விலேயில் விற்க முயற்சித்தல்; புது நூல்களே சிருஷ்டிசெய்ய ஊக்குமளித்தல்; தகுதியுள்ள ஏழை ஆராய்ச்சியாளர்களுக்கு சிறு அளவிலாவது பண உதவி செய்தல்,...

பிள்ளே: இது என்ன அநியாயம்! காலம் மாறிவிட்டது. நமது தேவைகள் நாளுக்கு நாள் மாறுகின்றன. உலகத்தில் பிறருடன் சமமாய் வாழ வேண்டுமானுல் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய புது முயற்சிகள் எத்தனேயோ இருக்கின்றன; அவற்றையெல்லாம் விட்டு விட்டு ஏதோ பூச்சியரித்த ஏட்டுச் சுவடிகளேக் கட்டிக்கொண்டு...புது நூல்களே சிருஷ்டிக்கும் முயற்சிதான் என்ன? கருத்து அல்லது செய்முறை தற்காலப் போக்கை யொட்டி உன்னதமாக இருந்தால் அந்தப் புத்தகத்தைத் தமிழ்ப்படிப்பு மட்டும் உள்ளவர்கள் புரிந்துகொள்வது கடினம்; மேல் நாட்டு முறையில் தேர்ந்தவர்களோ ஆங்கில மூல நூலேயே படித்துக்கொள்வார்கள்.

சங்: சுருங்கச் சொன்னுல் காசுக்குதவாத தமிழ் மொழியை மென்னியைத் திருகி ஒரு கல்லேயும் கட்டி வங்காள குடாக்கடலில் ஆழமான இடத்தில் போட்டுவிடவேண்டும் என்று யோசனே கூறுகிறீர்கள்!

பிள்ளே: அடாடா! தர்க்கம் செய்யும்போது கோபித்துக்கொண்டுவிட்டால் அப்புறம் என்ன செய்வது?...வீட்டிலும் வெளியிலும் பேச்சு வார்த்தைக்கும், சில்லறைக் கடைக்கணக்குகளுக்கும், கீழ்க்கோர்ட்டு அல்லது ஆபீசு நடவடிக்கைகளுக்கும் தமிழ் எப்பொழுதும் உபயோகப்பட்டுத்தான் வரும். அதை விட்டுவிட்டு 'தமிழின் பெயரைச் சொன்னுலே நாக்கில் தேன் ஊருகிறது.' 'காதில் தேன் பாய்கிறது,' 'தமிழை வெறும் விவகார பாஷை என்று சொல்லி இகழ்ந்தால் ரத்தம் கொதிக்கிறது' என்றெல்லாம் சொன்னுல் ஒப்புக்கொள்வதற்கில்லே. காதில் தேன் பாய்ந்தால் எறும்பு மொய்க்கும், ரத்தக் கொதிப்பு உண்டாகும் உடனே டாக்டரிடம் ஓடவேண்டும். பேசிக்கொண்டு நிற்கக்கூடாது. இயற்கையான கிழத்தனத்தால் கொட்டிலில் அடைபடும் மொழியை செயற்கை கௌரவத்தால் எத்தனே நாள் தூக்கி நிறுத்த முடியும்? தமிழ் மட்டுமல்ல, தெலுங்கு, வங்காளி, பஞ்சாபி, ஹிந்தி எல்லா மொழிகளுக்கும் அந்தந்த மாகாணத்தார் இவ்விதமாகவே பயனற்ற தொண்டு புரிகிருர்கள்...பிறர் பணத்தைக் கொண்டு.

முதலியார். நீங்கள் இப்படிப் பேசுவது எனக்கு மிக வருத்தத்தை உண்டாக்குகிறது. ஆனுல் அது கிடக்கட்டும். இம்மாதிரி வாதங்களுக்கு முடிவே கிடையாது. கொள்கைகளேயும் லட்சியங்களேயும் காரணம் கூற முடியாத பாசங்களேயும் மறந்து விடுங்கள். சில மாணுக்கர்கள் பழைய நூல்களேப் படிக்கவேண்டும் என்று விரும்புகிருர்கள். வேறு சிலர் இலக்கியம் என்று கருதக்கூடிய புதிய நூல்களேப் பதிப்பிக்க விரும்புகிருர்கள். அவர்களுக்காக ஒரு நிரந்தர ஏற்பாடு வேண்டாமா?

பிள்ளே: இதில் சங்கடம் என்ன? படிக்க விரும்புகிறவன் சம்பளம் கொடுக்கட்டும்; நூலாசிரியன் பதிப்பாளனுடன் சட்டப்படியான ஒப்பந்தம் செய்து கொள்ளட்டும். அவ்வளவுதானே?

முதலியார்: மாணுக்கன் ஏழையாக இருந்தால்? நூலாசிரியன் உலக அனுபவமற்றவனுக

வும், பதிப்பாளன் ஆசைபிடித்த-என்ன சொல்லட்டும் நம்பத்தகாத ஆளாகவுமிருந்தால் ?

பிள்ளை : ஏழை மாணவனுக்கு அவனிடம் அனுதாபமும் நம்பிக்கையுமுள்ளவர் யாரேனும் நன்கொடை கொடுக்கட்டும் ; அல்லது சம்பாத்திய காலத்தில் வட்டியுடன் திருப்பிக் கொடுப்பதாக அவன் தகுந்த ஜாமீனுடன் சங்கத்திற்குக் கடன் பத்திரம் எழுதிக் கொடுக்கட்டும். எந்தக் காரியம் செய்தாலும் வழவழா கொழகொழா இல்லாமல் கண்டிப்பாக வியாபார முறையில் செய்தால் எல்லாருக்கும் க்ஷேமம் ' என்பது என் கொள்கை. நூலாசிரியன் விஷயத்தில் எழுத்தாளர் சங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். பல நாடுகளில் அப்படிச் செய்கிறார்கள்.

சங் : இதெல்லாம் இங்கே முடிகிற காரியமா?

பிள்ளை : ஏன் முடியாது? ஒரு உதாரணம் கேளுங்கள். மோட்டார்கார் உற்பத்தியாளன் ஹென்றி ஃபோர்டு இருந்தானே அவனிடம் சிலர் சென்று ஒரு ஆஸ்பத்திரிக்காக நன்கொடை கேட்டார்களாம். 'ஆஸ்பத்திரியை நடத்த வருமானம் காணவில்லை. அதை மூடிவிட்டால் ஜனங்கள் கஷ்டப்படுவார்கள்.' என்று சொன்னார்களாம். ஃபோர்டு தன் ஆட்களை அனுப்பி வரவு செலவு தகவல்களெல்லாம் விசாரித்துக்கொண்டு, 'ஆஸ்பத்திரியை நஷ்டமில்லாமல் நடத்தலாம் என்று எனக்குத் தோன்றுகிறது; நான் நன்கொடையாக ஒன்றும் கொடுக்கமாட்டேன். இஷ்டமிருந்தால் அதை என்னிடம் ஒப்புவித்து விடுங்கள்; லாபமோ நஷ்டமோ இப்போதிருக்கும் வசதிகளைக் குறைக்காமல் நடத்தி வருகிறேன்.' என்றானும். அவர்கள் முதலில் சற்று தயங்கினார்கள் ; கடைசியில் ஒப்புக்கொண்டார்கள். ஃபோர்டு பல சீர்திருத்தங்களோடும் புது வசதிகளோடும் ஆஸ்பத்திரியை நடத்தினான். வெகு தொலைவிலுள்ள நோயாளிகளும் அங்கு வர ஆரம்பித்தார்கள். முதல் இரண்டு வருஷங்களில் நஷ்டமும் மூன்றும் வருஷத்திலிருந்து லாபமும் ஏற்பட்டதாம்.

பணம் கொடுக்காமல் தப்பித்துக் கொள்வதற்காக ஊர்க்கதையெல்லாம் அளக்கிறேன் என்று நினைத்துவிடவேண்டாம். என்னாலானது கொடுக்கிறேன்—இயக்கத்தில் உள்ள பிரியத்திற்காக அல்ல, மனுஷாள் தாக்ஷண்யத்திற்காகத்தான்.

இவ்வாறு சொல்லி பிள்ளை உள்ளே சென்று ஐம்பது ரூபாய்க்கு ஒரு செக் எழுதிக் கொண்டு வந்து கொடுத்தார். கொஞ்சநேரம் மூவரும் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு வந்தவர்கள் தம்வழி சென்றனர்.

o o o

நான்கு வருஷங்கள் கழிந்தன. சோமநாத பிள்ளை ராவல்பிண்டியிலிருந்து ஸயால்கோட் போய்க்கொண்டிருந்தார்.

1947-க்கு முன்பு.

வஜிராபாத் ஜங்ஷனில் வண்டி மாற்றவேண்டும். சாமான்களை ரிடைரிங் ரூமில் வைத்துவிட்டு மாலை வெயிலில் பிளாட்பாரத்தில் உலாவிக் கொண்டும் வியாபார விளம்பரங்களைப் பார்த்துக் கொண்டுமிருந்தார். வஜிராபாத் முன்காலத்தில் பட்டாக்கத்திகளுக்குப் பேர்போன இடம் ; இப்பொழுது எஃகுக் கத்திகள், கத்தரிக்கோல்கள் முதலிய வெட்டாயுதங்கள் செய்து நாடெங்கும் அனுப்புகிறார்கள். மாதிரிக்கு, பிளாட்பாரத்தில் கண்ணாடி அலமாரிகளில் அச்சாமான்கள் ஜோடித்து வைத்திருக்கிறார்கள்.

பிள்ளை வெவ்வேறு ரெயில்வேயின் கால அட்டவணையின் முன்னும் சற்று நின்று கவனித்து வந்தார். அதே சமயம் தென்னாட்டுக் கிழவர் ஒருவரும் அவர் பேரனும் பொழுது போக்காக ரயிலடிக்கு வந்தார்கள். கிழவரின் பஞ்சகச்சமும் பல நாள் க்ஷவரம் செய்யாத முகமும் சந்தனக் கீறலும் ஆரம்பத்தில் ஸ்டேஷன் சிப்பந்திகளுக்கு விந்தையாக இருந்தன. ஆனால் நாளடைவில் பழகிப்போய் விட்டது. அவர்களிருவரும் வழக்கம் போல்...அலுப்பில்லாமல் யாத்திரை விளம்பரங்களையும் கால அட்டவணைகளையும் பார்த்துக் கொண்டே தென்னிந்திய ரெயில்வே அட்டவணையின் அருகே வந்தார்கள். ஆனால் அதன் எதிரே ஐரோப்பிய உடைதரித்த ஒருவர் கம்பீரமாக நிற்பதைக்கண்டு சற்று விலகி நின்றார்கள். பையன் அவரையே கவனித்துக் கொண்டிருந்தான். அவர் சோமநாத பிள்ளைதான்.

வஜிராபாத் ஜங்ஷனில் எஸ். ஐ. ஆர். அட்டவணை இருக்குமென்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. ஆகையால் திடீரென்று அதைக் கண்டதும் அவர் மனத்தில் பல நினைவுகள் மோதிக்கொண்டு வர மயிர் சிலிர்த்தது. கிளை லைன்களைப்பற்றிய விவரங்களைப் படிக்கையில் அவர் உள்ளூரச் சிரித்துக் கொண்டார். சிலசில இடங்களின் பெயர்கள் ஊர் நினைவும் ஏக்கமும் உண்டாக்கின. இப்படிப் பார்த்துக்கொண்டே வரும்போது மதுரை-போடி லைன்மீது கண் விழுந்தது. ஆண்டிப்பட்டி என்னும் ஸ்டேஷனின் பெயரை வாசித்தார். உடனே ஜோ என்னும் இரைச்சலுடன் அவருக்கு என்னமோ செய்ய ஆரம்பித்தது. மூர்ச்சையாவது போல இருந்தது. அட்டவணைப் பலகையைப் பிடித்துக்கொண்டு சமாளிக்கப்பார்த்தார். அதே க்ஷணத்தில் சிறுவன், 'தாத்தா, தாத்தா, அந்த மாமா கீழே விழறாப்போலே இருக்கார் தாத்தா !' என்று கூவினான்,

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததும் பிள்ளை சட்டென்று திரும்பினார். கிழவரைப் பார்த்தார். அவர் மனக்குழப்பம் இன்னும் அதிகரித்தது. அவரால் தடுக்கமுடியவில்லை. மூர்ச்சித்து விழுந்தேவிட்டார்.

உடனே நாலுபேர் அவருக்கு ஒத்தாசை புரிய ஓடி வந்தார்கள் அவர்களுள் ஒருவர் டாக்டர். அவர் பிரதம சிகிச்சை செய்து பார்த்தார். மூர்ச்

சை தெளியவில்லை. இவர் யாராய் இருக்கக் கூடுமென்று அவருடைய சட்டைப் பைகளிலிருக்கும் காகிதங்களைப் பார்த்ததில் இன்னார் என்று தெரிந்தது. சோமநாதபிள்ளை தென்னாட்டுக்காரர் என்று தெரிந்ததும் பக்கத்திலிருந்தவர்கள் கிழவரைப் பார்த்து, 'ஏ மதறாசி பாபு, இவரை உங்களுக்குத் தெரியுமா ?' என்று கேட்டார்கள்.

அவர் கவனித்துப் பார்த்துவிட்டு 'தெரியாது' என்றார். அப்போது டாக்டர்...'இவரை ஸயால் கோட் ஆஸ்பத்திரிக்கு அனுப்பவா. உங்கள் வீட்டுக்கு அழைத்துப்போக விரும்புகிறீர்களா ?' என்று விசாரித்தார்.

கிழவர்-முன்பின் தெரியாதவரை, பிரக்ஞையற்றவரை, நாங்கள் அழைத்துக்கொண்டு போய் என்ன செய்வது ? என்ன நோயோ என்னவோ ? சற்று பொறுங்கள்: என் மகன் வீ. ஸீ. கம்பெனியில் இஞ்ஜினியர் அவனுக்கு வேண்டுமானாலும் டெலிபோன் செய்து பாருங்கள்,' என்று யோசனை கூறினார்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கிழவரின் மகன் ரங்கய்யர், அங்கே வந்து சேர்ந்தார். எல்லா விவரமும் விசாரித்துக்கொண்டு அவர் சோமநாத பிள்ளையைக் கவனமாய்ப் பார்த்தார். பார்த்தால், தன்னுடன் வாசித்த சோமு-'மூன் லார்ட் ஸன்' என்ற ஆங்கிலப்பெயர் அளிக்கப்பட்ட சோமநாத பிள்ளை.

இன்னும் மூர்ச்சை தெளியவில்லையே என்ற கவலையுடன் ரங்கய்யர் தம் நண்பனை டாக்ஸியில் வைத்து வீட்டிற்குக் கொண்டுபோனார். டாக்டர் வந்து பார்த்து...'கீழே விழுந்ததில் மூளை அதிர்ச்சி கொஞ்சநேரத்தில் தெளியும் என்று தோன்றுகிறது. தெளியாவிட்டால் பெரிய டாக்ஸியில் படுக்கவைத்து லாஹோர் ஆஸ்பத்திரிக்குப்போய் எக்ஸ்-ரே வகையறா செய்யவேண்டிவரும். முன்னெச்சரிக்கையாக அங்கே கர்னல் ராவுக்கு ட்ரங்க் டெலிபோன் செய்துவைப்பதும் நல்லது. எதற்கும் நான் ஒருமணி நேரம் கழித்து வருகிறேன், என்று சொல்லிவிட்டுப் போனார்.

ரங்கய்யர் கையில் ஒரு துப்பறியும்நாவலுடன் சோமுவின் கட்டிலின் அருகில்உட்கார்ந்திருந்தார். பக்கத்து அறையில் அவருடைய மகன் கேதாரி, மகள் சரஸ்வதி இருவரும் பாட்டனாரிடம் பாடம் கற்றுக்கொண்டிருந்தார்கள். கேதாரிக்கு வயது ஏழு ; சரஸ்வதி மூன்று வயது பெரியவள். இருவரும் ஆர்ய சமாஜ் ஹிந்திப் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தார்கள். வீட்டில் தமிழ் கற்றுக் கொண்டு வந்தார்கள். அவர்கள் படிக்க ஆரம்பித்துவிட்டால் ஒரே போட்டி படிப்பில் அல்ல, கேட்போர் காது கிழிய இரைவதில். அவள் 'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி...' என்று காட்டிலிருக்கும் மயில்களெல்லாம் நடுங்கும்படி கத்துவாள். அவள் 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்று ஐந்து கண்டத்தாருக்கும் சத்உபதேசம் செய்வான். அவள் 'ஒரு மாகாணி மாகாணி, பத்து மாகாணி அறையோ அறைக் கால்...' என்று இடையினத்தையெல்லாம் வல்லினமாக்குவாள். அவன் 'பன்னண்டோன் பன்னண்டு; பன்னண்ரெண்டு இருபத்திநாலு...' என்று, நிமிர்ந்த மார்புடன், டஜன் கணக்கில் தவளைகள்கூடிக் கச்சேரி நடத்துவது போல் அடித்தொண்டையிலிருந்து கத்துவான். வீசம் வாய்ப்பாட்டைக் காட்டிலும் பன்னிரண்டாம் வாய்ப்பாடு பன்மடங்கு பெரிதல்லவா—என்பது அவன் கருத்துப்போலும்?

இப்படி இவர்கள் கூவும்போதெல்லாம் நோயாளி சற்று அசைந்து கொடுப்பார். பிரக்ஞை வருவதுபோல் இருக்கும். அவர் லேசாய் முணுமுணுப்பார். முகம் சற்று கோணும். பிறகு மறுபடி தூங்கிவிடுவார். இப்படி இரண்டு மூன்று தடவை நடந்தது. ரங்கய்யர் குழந்தைகளை எச்சரித்துவிட்டு...' சோமு ! சோமு ! என்று மிருது வாய்க் கூப்பிடுவார். இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் குழந்தைகள் தம் வித்தியாப்யாச அலறலை மறுபடி ஆரம்பித்து விடுவார்கள். காதின் வழியாகத்தான் மூளைக்கு அறிவு செல்கிறது என்று அந்த பஞ்சாபிப் பாடசாலை அவர்களுக்குக் கற்பித்திருந்தது.

இப்பொழுது சரசுவின் முறை. அவள் 'செந்தமிழ் நாடெனும்போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்று உரக்கப் பாட ஆரம்பித்தாள். பிள்ளை பெருமூச்சுவிட்டு நெளிந்து கொடுத்தார். கண்களை மெல்லத் திறந்து திறந்து மூடினார். வாயை லேசாய்ச் 'சப்புக் கொட்டினார்.' மறுபடி தூங்கப்பார்த்தார் ஏதோ பிடிக்காத விஷயத்தை மறக்கடிக்க முயல்வதுபோல் முகம் கோணிக் கசந்திருந்தது.

ரங்கய்யர் அவரை மெதுவாய்த்தட்டி,சோமு! சோமு! என்று பரிவுடன் அழைத்தார். பிள்ளை ஆங்கிலத்தில் முணு முணுத்துக்கொண்டே கண்களை இறுக மூடிக்கொண்டார். ரங்கய்யர் மேலும் மேலும் அன்புடன் தட்டி அழைக்கவே, அவர் கண் திறந்து பார்த்தார். ஒன்றும் புரியவில்லை. புது இடம், புது மனிதர், விந்தையான உணர்ச்சி, சிரமப்பட்டு தலையைத் திருப்பி திருப்பி நாலாபுறமும் பார்த்தார். மயக்கம் தெளிய ஆரம்பித்தது ஆங்கிலத்தில்...'எனக்கு என்ன நேர்ந்தது ? இது என்ன இடம் ? நீங்கள் யார் ? என்று வினவினார்.

ரங்கய்யர் 'சாயங்காலம் ரயில்வே ஸ்டேஷனில் இருக்கும்போது உங்களுக்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. வண்டியில் வைத்து இங்கே அழைத்து வந்தேன்' என்றார்.

'நீங்கள் யார் ?'

'நான் ஒரு மதறாசி. இங்கே வீ. ஸீ. கம்பெனியில் எஞ்ஜினீராக இருக்கிறேன். மிஸ்டர் ரங்கா அய்யர் என்று இவ்வூரார் சொல்வார்கள்.'

'எனக்காக நீங்கள் மிக்க சிரமப்பட்டிருக்கிறீர்

கள். நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவனாகிறேன்.'

'அது இருக்கட்டும். இப்பொழுது ஏதாவது சாப்பிடுகிறீர்களா ?'

'ஒன்றும் வேண்டாம், தேவைப்பட்டால் கேட்கிறேன்.'

'காபி தயாராயிருக்கிறது.'

'காபியா ? இந்த அத்துவான ஊரில் காபியேது ? காபி இருந்தால் குடிக்கிறேன். மெனி மெனி தாங்க்ஸ்.'

காபி சாப்பிட்டானதும் பிள்ளை சிறிது நேரம் கண்ணை மூடிக்கொண்டு அமைதியாய்ப் படுத்திருந்தார். பிறகு கண்ணைத் திறந்து புன்சிரிப்புடன் 'என்னால் உங்கள் குடும்பத்தாருக்கு ரொம்ப சிரமம். நினைத்தாலே வெட்கமாக இருக்கிறது. நான் ஸ்டேஷன் வராண்டாவில் விழுந்துவிட்டேனா ?' என்று கேட்டார்.

'ஆம்.'

'தலையில் இந்த இடத்தில், ரொம்பவலிக்கிறது. காயம் கீயம் பட்டுவிட்டதா ? டாக்டர் கவனித்தாரா ?'

'பார்த்தார், காயம் இல்லை. அதிர்ச்சிதான் அதிகம்...உங்கள் ப்ளட் ப்ரெஷர் எப்படி ?'

'பார்த்து ரெண்டு வருஷமாகிறது. அவசியம் ஏற்படவில்லை; அப்பொழுது பத்து பாயின்டு அதிகமாக இருந்தது.'

'அப்படியா, இரண்டு நாள் சிரம பரிகாரம் செய்துகொண்டால் சொஸ்தமாகிவிடும். பேசுவது சிரமமாக இருந்தால் சற்று அமைதியாய்ப் படுத்திருங்கள். சமையல் என்ன செய்யலாம் என்று மட்டும் சொல்லிவிட்டால்...'

'சே, அப்படி ஒன்றுமில்லை. தினசரி வீட்டுச் சமையலே போதும்—சாதமானாலும் சரி, சப்பாத்தியானாலும் சரி, இப்பொழுது அவ்வளவு அசதியாய் இல்லை. எழுந்து வேண்டுமானாலும் உட்காருகிறேன் பாருங்கள்... (புருவத்தை நெரித்து) உங்களை எங்கேயோ பார்த்த நினைவாய் இருக்கிறது, சட்டென்று நினைவு வரவில்லை.'

'என்ன சோமு ! நினைவில்லையா ? கணேசய்யர் கணக்கு வகுப்பில்...'

'அடேடேடேடே ! அந்த ரங்கனா ! இத்தனை நேரம் ஏன் கல்விழுங்கிபோல்...'

'பலஹீனமாய் இருக்கும்பொழுது மனசைக் குழப்பவேண்டாம் என்று பார்த்தேன். டாக்டர் வேறு தலையில் எக்ஸ்-ரே...' என்று கடுக்காய் கொடுத்துவிட்டார்.'

மறுநாள் காலை காபி சாப்பிட்ட பிறகு ரங்கய்யர் நிதானமாக—'ஆமாம், நேற்று ஏன் அப்படி மயக்கம் போட்டது ?' என்று கேட்டார்.

பிள்ளை சற்று தயங்கிவிட்டுப் பாதி ஆங்கிலமும் பாதி தமிழுமாகப் பின்வருமாறு சொன்னார். 'அது ரொம்ப விநோதமான அனுபவம். பிறருக்குப் புரியும்படி சொல்வதுகூடக் கஷ்டம். எனக்கே சரியாய்ப் புரிந்தால்தானே ! உனக்குத்தான் தெரியுமே, நான் சாதாரணமாக முரட்டு மனோபாவமுள்ளவன். கவிதை நாஸூக்கான உணர்ச்சிகள் இதெல்லாம் என்னிடம் கிடையாது, பிடிக்கவும் பிடிக்காது. என் தொழில் உண்டு, நான் உண்டு. ஒரு ரூபாய் செலவு செய்வதாயிருந்தால் எனக்குப் பதினேழு அணாவாவது வரும்படி வருமா என்று யோசித்துவிட்டுத்தான் பையில் கையைப் போடுவேன். மனைவிக்குக் கடிதம் எழுதினாலும்-அவள் குழந்தைகளைப் படிக்க வைத்துக்கொண்டு ஊரில் இருக்கிறாள்-முக்கியமான சமாசாரத்தைக் குறிப்பாய் எழுதுவேனே தவிர மற்ற eyes, nose 'நான் ஸென்ஸ்' ஒன்றும் எழுதமாட்டேன்...'

'அதென்ன ஐஸ், நோஸ் ?'

'கண்ணே, மூக்கு, என் காது(வ)லியே...!'

'ஓ, சரி, சரி; அப்புறம் ?'

'காரியமிருந்தால்தான் ஊருக்குப்போவேன். அர்த்தமற்ற சோமளை பாவங்களால் மனம் இளக்கம் கொடுத்து அதன் காரணமாக ஊருக்குப் போவது கிடையாது. அங்கே யாருக்காவது உடம்பு சரியில்லை என்றால் கூட டாக்டர், நர்ஸ், பணம் இவை செய்யாதது நான் என்ன செய்யப் போகிறேன் ?'

'இப்படிப்பட்ட மரக்கட்டை போன்ற, நான் நேற்று ஸயால்கோட் வண்டிக்காகக் காத்திருக்கும்போது உத்தேசம் ஒன்றுமில்லாமலே எஸ். ஐ. ஆர். டைம் டேபிளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது மதுரை-போடி லைன், ஆண்டிப்பட்டி ஸ்டேஷன் என்ற பெயர்கள் கண்ணில் விழுந்ததும் திடீரென்று வெள்ளப் பெருக்கில் சிக்கிக் கொண்டதுபோலத் தோன்றிற்று. கிறுகிறுப்பு உண்டாயிற்று. எனக்குப் பத்து வயதாயிருக்கும்போது என் தகப்பனார்ஆண்டிப்பட்டியில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டராக இருந்தார். அப்போது ரயில் கிடையாது மாட்டுத் 'தபால்' வண்டிகள் தானுண்டு. நீண்டு குகை போலிருக்கும்; எட்டு பேருக்கான வண்டிகள். அந்த நாள் நினைவுகளெல்லாம் படங்களாக, நான் முந்தி நீ முந்தி என்று போட்டியிட்டுக்கொண்டு மனத்தில் வந்து குவிந்தன. அமைதியாக நினைத்துப் பார்த்தால் ஆண்டிப்பட்டி பிரியப்படத்தக்க ஊரே அல்ல. பல ஆண்டிப்பட்டிகள் பார்த்திருக்கிறேன்...எல்லாமே பெயருக்குத் தக்கபடி மோசம்தான். அது நீர் வளம் நிலவளம் நிறைந்த இடமல்ல; அங்கே மாதம் மும்மாரி கிடையாது. தோப்பு; துரவு, ஆறு,குளம் கிடையாது. நல்ல பள்ளிக்கூடம் கிடையாது

ஓச்சாத்தேவன் மகனையும் மாயாண்டியையும் விட்டால் விளையாட சகாக்கள் கிடையாது. பல விதத்திலும் வரண்ட சரளைக்காடு அல்லது சுக்கான்மேடு. அப்படிப்பட்ட இடம் நேற்று குறிப்பிட முடியாத இன்ப நினைவுகளுடன் என்னைத் தாக்கி புத்தியை மயக்கிவிட்டது. வெது வெதுப்பான கடலில் சிறு அலைகள்மேல் மிதந்து ஊசலாடுவது போன்ற உணர்ச்சி. அதிலிருந்து ஒருவாறு தப்பிக்கும் சமயத்தில், கெட்டித்தரைக்கு வரும் சமயத்தில்...'

'உனக்குக் கவிதை வராது என்றுயே!...அப்புறம்?'

'அதே சமயத்தில்-தாத்தா; தாத்தா! இந்த மாமா—என்ற தமிழ் வார்த்தைகள் காதில் பட்டதும், இன்று மூளை என்ன தமாஷ் செய்ய ஆரம்பித்திருக்கிறது என்பது போன்ற எண்ணம் உதித்தது; மறுபடியும் இரைச்சல், கிறுகிறுப்பு. அப்பொழுதுதான் பிரக்ஞை தப்பி விழுந்திருக்கவேண்டும். வெகு நாட்களுக்குப்பிறகு, எதிர்பாராத இடத்தில்—லாஹோர், ராவல்பிண்டி என்றால் வேறு சங்கதி, இந்த வஸீராபாத்தில் மனம் பல ஹீனமாயிருக்கும் சமயத்தில் பல ஆண்டுகளுக்கு முன் கேட்டு ரசித்த குரலில், காதில் விழுந்த அந்த வார்த்தைகளுக்கு விசேஷ சக்தி, அஸ்திவாரத்திலிருந்து கட்டடத்தை ஆட்டிவைக்கும் சக்தி, ஏற்பட்டுவிட்டது என்று நினைக்கிறேன். லண்டன் அல்லது நியூயார்க்கில் ஒரு சபையில் உட்கார்ந்திருக்கிறோம், மனம் ஏதோ ஒரு விஷயத்தில் ஈடுபட்டிருக்கிறது, அந்த நேரத்தில் பின்னுலிருந்து ஒரு குரல் 'அண்ணு, ஒரு சிம்டா பொடி கிடைக்குமோ?' என்றால் எப்படியிருக்கும். சுமாராக அதைப்போல் வைத்துக்கொள்.

'பிறகு இங்கே படுத்திருக்கும்போது தமிழ்ச் சொற்கள் நடுநடுவே காதில் விழுந்தபோது பாதி பிரக்ஞை, பாதி பிராந்தியாயிருந்தது. என் கனவின் தொடர்ச்சிதான் அது என்று நினைத்து அதன் ஆதிக்கத்தை முறிக்க முயற்சிகள் செய்து கொண்டே இருந்தேன். மேலும் மேலும் தோல்வியே கிடைத்து வந்ததால் ஒரே எரிச்சலாக இருந்தது. காதின்மேல் ஒரு ஈ வந்து உட்காருகிறது; கையால் அதை விரட்டுகிறோம்; அது திரும்பத் திரும்ப அதே இடத்திற்கு வருகிறது; அதேபோல் இந்த வார்த்தைகளை என்னால் விரட்டி அப்புறப் படுத்த முடியவில்லை ..'

'பேஷ்!'

'அப்பொழுது பல வருஷங்களுக்குமுன்கேட்ட சோமு! சோமு! என்ற கனிவான குரல் காதில் விழவே எனக்கு என்மேல் இருந்த கோபமும் அருவையும்-மனம் இவ்வளவு கட்டுத்தளர்ந்திருக்கலாமா என்ற எரிச்சல்-அதிகப்பட்டன. உன் அன்பு நிறைந்த முயற்சியால் பூரு விழிப்பு வந்தபின் தான் நான் கேட்டுக்கொண்டிருந்த சுகமான வார்த்தைகள் என் பிரமையால் கற்பனை செய்யப்பட்டவையல்ல என்று தெரிந்தது. அப்போதும் மயக்கம் முற்றிலும் தெளிவதற்கு ஒரு மணிநேரம் பிடித்தது எனலாம்...'

'சுவாரஸ்யமான விளக்கம்.'

'இதெல்லாவற்றிலும் எனக்கு மிக்க ஆச்சரியத்தை அளித்தது என்னவென்றால் வெகு நாட்களுக்கு முன் பழகிய தமிழ் வார்த்தைகளால் மனதிற்கு உண்டான இன்பமும்இளக்கமும் பாஷைக்கு இவ்வளவு சக்தி உண்டு என்று நான் நினைக்கவேயில்லை. அரைக்கால் செகண்டில் என்னை 2000 மைல் தூரத்தையும் 30 வருஷ காலத்தையும் தாண்டி எங்கேயோ தூக்கிக்கொண்டு போய்விட்டதே, அலாவுதீனின் பூத கணங்களைப் போல், ஒரே வீச்சில் அவ்வளவு காலத்தையும் தேசத்தையும் இருந்த இடம் தெரியாமல் அழித்துவிட்டதே அல்லது தேசப்படத்தை ஒரு சுருட்டு சுருட்டி கன்யாகுமரியை இமயமலையில் கொண்டு சேர்த்து விட்டதே! இதற்கு அடிப்படைக்காரணமாக, தூண்டுகோலாக, எதைக் குறிப்பிட முடியும்? காரணத்தில் அடங்காத சில அனுபவங்களும் இருக்கின்றன என்றுதான் சொல்லவேண்டும். தாய்மொழிப் பற்றுதல் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஊறிப்போய் இருக்கிறது, தாயின் பாலிலுள்ள சத்துக்களைப்போல், பழைய காலத்து மதுரைச் சாயத்தைப்போல்! சாயத்தை விலக்க வேண்டுமென்றால் துணியிலிருக்கும் பஞ்சு நார்கள் எல்லாவற்றையும் விலக்கியாகவேண்டும் ..'

'பலே!

'கிராம அபிமானமும் மொழி அபிமானமும் என்னை இப்படி வசப்படுத்தும் என்று நான் நம்பவேயில்லை. உலர்ந்த, சாரமற்ற, பட்டுப்போன கட்டையென்று எதை நான் அசட்டை செய்தேனே அதில் இவ்வளவு உயிர்த்துடிப்பு இருக்கிறது! என்ன, ஒரு மாதிரிப் பார்க்கிறாய்? மூளை அதிர்ச்சி இன்னமும் வேலைசெய்து கொண்டிருக்கிறது, பிதற்றுகிறேன், என்று பயப்படுகிறாயா? அதொன்றுமில்லை......சரி, நான் சயால் கோட்டுக்குப் போக வேண்டும். வேலையை முடித்துக்கொண்டு நாளை மாலை 5-25 வண்டியில் வரப்பார்க்கிறேன்...(கேதாரியைப் பார்த்து)—க்யா ச்சோடே தோஸ்த், கல் ஸ்டேஷன் மிலோகே?

(இளம் நண்ப, நாளை ரயிலடியில் சந்திப்பாயா?

---

# இரவு

## டி. ஈ. ஹ்யூல்ம்

இரவு.
பயங்கர இரவு.
குன்றுவிளிம்பில் நிழலாடும்
அசைவற்ற மரக்கிளைகள்.
சவமாய் வெளுத்த
வானத்து உடலின்
பிணியுற்ற கருஞ்சிரைகள்.
புரளும் மென்மேகங்களை ஆளும்
இரக்கமற்ற 'மாரகனின்'
கிழிக்கும் இரும்புக் கொக்கி.
வானப் புல்வெளியில்
மேய்ந்தலையும் மந்தைமேல்
துர்தேவதைகள் போட்ட
சூடு.

(தமிழில்: நா. வெங்கட்ராமன்)

# புதுப்பார்வையில் பழைய தமிழ்க் கவிதை

## சி. கனகசபாபதி

தமிழில் பழைய படிமப் பாட்டின் வகைக்கு ஓரேர் உழவர் பாடிப் புறநானூற்றில் உள்ள பாட்டு ஒரு உதாரணம். அவர் பாட்டிலுள்ள தரிசுநிலப் படிமம் உணர்ச்சிப்பாங்கானது; பதினான்கே சீர்களுக்குள் இறுகலானது.

தரிசுநிலம் பற்றி அக்கவிஞர் பாடியதைப் பார்க்கும்போது 'இடத்தின் தூரம்' மனத்தில் நீண்டு தோன்றுவதை உணரமுடிகிறது. சுற்றத்துடன் கூடிவாழும் வாழ்க்கை கால்களைத் தடுக்கும் என்று கடைசி வரியில் கவிஞர் முடிப்பதைக் காணும்போது 'இடத்தின் 'சமீபம்' மனத்தில் வந்து நிற்கிறது. இவ்வாறு இடத்தின் தூரமும் சமீபமும் சொற்களில் வெளியீடுபெற வைத்திருக்கிறார் ஓரேர் உழவர்.

இதே கவிஞர் ஓரேர் உழவர் என்ற புனை பெயர் சூடக் காரணமான குறுந்தொகையில் இவருடைய ஒரு பாட்டு இடத்தின் தூரம் ஒன்றை மட்டும் காட்டுகிற உத்திச் சிறப்பு உடையது.

காதலன் பொருள்தேடும் தன் வினையை முடித்துக்கொண்டு தான் வருவதாகச் சொல்லியிருந்த காலம் வந்துவிட்டதும் புறப்பட்டு வந்து வழியில் வந்துகொண்டு, வந்துகொண்டிருக்கும் வழிக்கு மேலே நெடுகிச் செல்லும் வழியை நினைந்து பார்த்துக்கொண்டு தனக்குள் தானே சொல்லிக் கொள்கிறான். இதுதான் பாட்டின் துறை. அதாவது பாட்டுக்குக் கருப்பொருள்.

காதலியின் ஊரிலிருந்து மிக நெடுந் தூரத்தில் இவன் வந்துகொண்டிருக்கிறான் இப்போது. அவள் ஊர் 'நெடுஞ்சேண் ஆர் இடையதுவே' என்று நெஞ்சுக்குச் சொல்கிறான். நெடுந்தூரம் என்றால் எவ்வளவு தூரம்? காதம் என்னும் கணக்கில் இத்தனை காத தூரம் என்று சொன்னால் கணக்கின் அளவைத் தெரிந்து கொள்ளும் அறிவுக்குப் பொருளாகும். கற்பனை தெறிக்கும் கவிதைக்குப் பொருளாவது அவ்வளவாக முடியாது. ஆனால் 'ஆறைங்காதம் நம் அகநாட்டு 'உம்பர்' என்று இளங்கோ சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகிக்குக் கூறுவதாக இருபொருள் தோன்ற அமைந்திருப்பதில் கவிதையின் இன்பத் துடிப்பு இருக்கிறது என்றால் அது வேறொரு தனித்த சாதனை.

ஓரேர் உழவரின் பாட்டுத் தலைவன், தனது நெஞ்சைப் பார்த்து,

"ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர்ஏர் உழவன் போலப்
பெருவிதுப்பு உற்றன்றால்; நோகே யானே"

என்று பேசுகிறான். உழவன் ஒருவனுக்குப் பசுமையான ஒரு வயல் சொந்தமாக இருக்கிறது. அது நெற்பயிர் விளைவதற்குத் தகுந்த செம்மையும் உழவு செய்யும் காலத்திற்குப் பக்குவமும் கொண்டுள்ளது. மேலும் காய்ந்து கருவாடாகப் போகாமல் ஈரம்பட்டும் இருக்கிறது. அந்த வயலின் பரப்பளவுக்கு உழவை நன்றாக விரைவாகச் செய்து முடிக்க வேண்டுமானால் ஒரே ஒரு ஏர் மட்டும் இருந்தால் போதுமா? தனது ஒற்றை இலக்கமான ஏரையே பார்க்கிறான் உழவன். வயலின் பரந்த இடத்தையும் காலப் பக்குவத்தையும் அடுத்தபடி பார்த்துச் சிந்திக்கிறான். அவனுக்கு விரைவாக முடிக்க வேண்டுமே என்றிருக்கிறது. அவனை வாட்டி வதைக்கிறது விரைவு. அதோடு அவனுக்கு நடுக்கமாகவும் இருக்கிறது. பாட்டிலுள்ள 'விதுப்பு' என்னும் சொல்லுக்கு விரைவு, நடுக்கம் என்று இரண்டுவகைப் பொருள்களும் உண்டு. அந்த உழவனைப் போலவே தனக்கு விரைவைப் பற்றியே சிந்தனையாக நடுக்கமாக ஆகியிருக்கிறது என்று பாட்டுத் தலைவன் 'தனக்குள் பேசுகிறான். மீண்டும் அவன் சொல்லும் வரிகளைக் 'கேட்கலாம்.

"ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர்ஏர் உழவன் போலப்
பெருவிதுப்பு உற்றன்றால்; நோகோ யானே"

நமக்குத் தேவைப்படும் கடைசி மூன்று வரிகளையே ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம்.

இங்கு 'இடத்தின் தூரம்' புனைந்து சொல்லப் பட்டுள்ள அழகை நாம் பார்க்கவேண்டும். காதலியின் ஊர் தள்ளி இருக்கிறது நெடுந்தூரத்தில். அது எவ்வளவு தூரம்? பரந்த வயலில் ஒரே ஒரு ஏரை மட்டும் கையில் பிடித்துக் கொள்ளும் உழவனுக்கு முன்னால் நெடுகிக் கிடக்குமே வயலுக்கு உரிய இடத்தின் தூரம், அதுபோல நெடுந்தூரம். இடத்தின் தூரத்தை மட்டும் கற்பனையில் பார்க்கச் செய்யும் பழைய தமிழ்க் கவிதை இது.

இதன் ஆசிரியர் ஓரேர் உழவர் புறநானூற்றில் பாடிய தரிசுநிலப் படிமம் உருவாகி அமைந்துள்ள பாட்டில் இடத்தின் தூரமும் சமீபமும் ஒருங்கே சொற்களில் வெளியீடு பெற்றதைக் கண்டோம். இக்கவிஞர் இவ்விரண்டு பாட்டுக்களிலும் படிமத்தின் எழுச்சி இல்லாமல் பாடவில்லை. இடத்தின் அளவு பற்றிய கற்பனையை எழுப்பும் இரண்டிலுமே இரண்டு அழகுப் படிமங்கள் திகழ்கின்றன இப்படிமங்கள் உணர்ச்சிப்பாங்கானவை; இறுகலாக உள்ளன.

2

இப்படியேதான் பழைய தமிழ்க் கவிதைகள் எல்லாமே இருந்துவிடவில்லை. படிமவியலுக்கு நெருக்கம் இல்லாமல் கூடப் பழைய தமிழ்க் கவிதைகள் ஒருசில இருக்கின்றன.

பாரிவள்ளல் இறந்தபின் அவனுடைய இரு புதல்விகளும் தங்கள் பரம்புக் குன்றை விட்டு நீங்கிக் கபிலருடன் வந்தனர். அப்போது அவர்கள் பாடியதாக ஒரு பாட்டு நமக்குக் கிடைத்திருக்கிறது.

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்
எந்தையும் உடையேம்; எம்குன்றும்
பிறர்கொளார்;

*இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்*
*வென்றுஎறி முரசின் வேந்தர்எம்*
*குன்றும் கொண்டார்;யாம் எந்தையும்*
*இலமே.''*

இந்தப் பாட்டில் எந்தப் படிமமும் துல்லியமாகக் காட்சியழகுடன் காணவில்லை. தந்தையைப் பறிகொடுத்த ஒரே உணர்வு சொற்களை மீறிக் கொண்டு பொங்குகிறது. எந்த நாளில் எப்படி இருந்த நிலா, அந்த நிலாக் காலத்தில் தந்தையும் புதல்விகளும் எப்படிப் பேசியிருந்த நிலை, இன்றைய நிலாவின் எப்படிப்பட்ட காட்சி என்பன போன்றவற்றை வர்ணித்துப் பாடவில்லை பாரியின் பெண்மக்கள். வர்ணனை வந்தால்தான் கவிதையா? படிமம் பார்க்காவிட்டால் கவிதை இல்லையா?

பாரியின் புதல்விகள் கபிலரைப் போலப் பாட்டு எழுதுதல் ஒரு கலையாக அல்லது தொழிலாகப் பெற்றவர்கள் என்று சொல்லமுடியாது. ஆனால் கவிதையை ஒருவாறு கலையாக உணர்ந்தவர்கள் என்று சொல்லலாம். இன்னும் சொன்னால் அவர்கள் கவிதையைக் கண்டவர்கள் ஆகலாம். ஆனால் அதைக் கலையாக எப்போதாவது ஒரொரு சமயம் (இப்போதுபோல) உணர்ந்தவர்கள் என்று சொல்வது மேலும் கொஞ்சம் பொருத்தம். அத்தகையவர்களை ஒரு நல்ல படைப்பை உருவாக்கச் செய்திருக்கிறது ஆற்றமுடியாத பெரிய சோகம் ஒரு அக அனுபவத்தில் வீழ்ந்து உளையும்போது கவிதை பிறக்க ஏதுவாகிறது. அக அனுபவம் உண்டாவதற்கும் தாங்கமுடியாத புறச்சூழ்நிலையின் காரணமும் உந்துதலும் இருக்கும்போது கவிதை கருக்கொள்ள ஏதுவாகிறது. தந்தையை இழந்த புறச்சூழ்நிலை, அதனால் சோகம் நிரம்பிய அக அனுபவம் இவை பாரியின் புதல்விகளைக் கவிதையைக் கலையாக உள்ளுணர வைத்தன என்று சொல்லலாம்.

இப்பாட்டில் எந்த வர்ணனையும் படிமமும் தேவைப்படாமல் போரில் ஒரு தந்தையின் கோர மரணத்தையும் அதனால் அவனுடைய பெண்மக்கள் சோகத்தால் உயிர் துடித்ததையும் நாம் உணரமுடிகிறது. இது ஒன்று மட்டும் இல்லை. இதற்கும் மேலே இப்பாட்டில் இடத்தின் தூரத்தோடு, கடந்து சென்ற காலத்தின் தூரம் பற்றிய உணர்வும் ஒரு பேரலையாகப் பொங்குவதே இதன் தனிச்சிறப்பு. ஓரேர் உழவரின் புறநானூற்றுப் பாட்டில் தரிசுநிலப் படிமச் சித்திரிப்பின் பின்னணியில் இடத்தின் தூரமும் சமீபமும் கற்பனையுடன் உருவானதை இங்கு மீண்டும் நினைவு கொண்டால் வேறுபாடு நன்கு தெரியும். பாரியின் புதல்விகள் பாடிய 'அற்றைத் திங்கள்' பாட்டு, கடந்து சென்ற காலத்தின் தூரத்தை மனத்துக்குக் கொண்டுவருகிறதைப் பார்க்கும்போது, அது பழைய தமிழ்க் கவிதையானாலும் புதுமைக்குப் புதுமை தருகிறது என்று எனக்குப்படுகிறது.

பாரி வள்ளலைப் பிரிந்த சோகம் நிரம்பிக் கபிலர் முதலான கவிஞர்கள் பாடிய பாட்டுக்களில், குறிப்பாகக் கபிலரின் பாட்டில், பாரியின் பறம்பு மலையைப் பிரிந்து செல்ல ஆற்றாத நிலையைப் பாடும்போது; மேலே நாம் கண்ட இடத்தின் தூரம் பற்றிய கற்பனை மிக்க எழிலுடன் திகழ்கிறது. உதாரணத்துக்கு,

''ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும் சிறுவரை
சென்றுநின் றோர்க்கும் தோன்றும் மன்ற''

என்று தொடங்கும் கபிலர் பாட்டை எடுத்துக் காட்டலாம். புறநானூற்றிலே பாரி சாகப் பறிகொடுத்த பறம்புமலை பற்றிய கவிதை ரசிகர்களுக்கு என்றும் புதுப்படைப்பாகும்; உலகின் கவிதை நேயர்களுக்கெல்லாம் புதுவிருந்தாகும்.

இந்த இடத்தில் ஒரு சந்தேகம் எழக்கூடும். புறநானூற்றை இலக்கிய ரீதியாகப் பார்க்கத் தொடங்கினால் இந்தச் சந்தேகம் பொதுவாக் வரக்கூடியது. எனவே சந்தேகம் தெளிவாக்கப் படுவது அவசியம்.

பாரி இருந்ததும் இறந்ததும் பழைய வரலாறு. பாரிமகளிர், கபிலர் முதலியோர் பாடியிருப்பவை பழைய வரலாற்றைத் தெரியவும் எழுதவும் மட்டுமே பயன்படாமல் வேறு எவ்விதம் பயன்பட முடியும்? இதுதான் எழக்கூடிய சந்தேகக் கேள்வி. அதாவது பாரியின் பெண்மக்கள் பாடிய 'அற்றைத் திங்கள்' பாட்டு வரலாற்றுக் குறிப்பே தருவது என்றும் அது கவிதையாக எப்படிச் சொல்லப்படும் என்றும் கேட்கலாம். அதுபோன்ற மற்ற பாட்டுக்களையும் மனத்தில் கொண்டு கேட்கலாம்.

இன்று நமது தலைமுறைக்குத் தெரியாத வாழ்க்கை பாரியின் வாழ்க்கை. அதிலிருந்து நாம் மாறி எவ்வளவோ தூரம் கடந்து வந்து விட்டோம் மூவேந்தர் காலம் என்று நாம் பேசும் சங்க காலத்திற்குச் சான்றான சரியான முழுமைச் சித்திரிப்பு நமக்கு வேண்டுமானால் பாரியின் கதை போதுமானது. எனவே ஒரு குறிப்பிட்ட காலத்தை முழுமையாக நன்றாக அறியப் போதுமானது என்று சொல்லத் தகுந்த பாரியின் கதையைப் பொக்கானது என்று நாம் மெத்தனிக்க முடியாது.

பாரியின் வாழ்க்கையைச் சுவையாகக் கதை சொல்வது போலவும் இங்கு நான் குறிப்பிட்டு வரும் புறநானூற்றுப் பாட்டுக்கள் இருக்கின்றன. ஆனால் கதை அல்லது வரலாற்றுக் காட்சிக்காக மட்டும் அவை இல்லை அந்த வரலாற்றுக்கு மனித உணர்வை இழைத்துப் பின்னி, இலக்கிய உருவம் சமைத்து நிற்கின்றன அப்பாட்டுக்கள். மேலும் இலக்கியம் என்றால் அதற்கு வேண்டும் என்று சொல்லப்படுகிற நிலைபேறுடைமையைப் (Permanence) பாரியின் கதைக்கு அவை இன்றும் கொடுக்கின்றன. மேலும் நாம் வாழாத காணாத ஒரு காலத்தை இன்று நமக்கு அன்னியமாகாமல் மிகவும் அணிமையாகும்படி ஒரு அழியாத குணரூபமாக (abstraction) ஆக்கி நிற்கின்றன.

இந்த நோக்கில் பாரி மகளிரின் 'அற்றைத் திங்கள்' பாட்டைப் பார்த்தால், அது வரலாறு அல்லது கதைசொல்வதற்கும் மேலாக அதற்கு இலக்கிய உருவத்தை மனித உணர்வின் இழைகளால் சமைத்துக் கொடுத்து, அதற்கு நிலைபேறுடைமை விளங்கச் செய்து, காணாத காலத்தைக் குணரூபக் காட்சியாகச் செய்கிறது என்று தெளிவாக உணரலாம்.

3

குறுநில வேந்தன் பாரி மாய்ந்தானே, மூடியுடைப் பெரிய மூவேந்தர்கள் தலையெடுக்கிறார்களே என்று சீறிப் பொங்கும் கோபம் இப்பாட்டில் இல்லை. இதற்கு மாறாகப் பாரி மகளிரின் 'பிறந்த இடத்துப் பாசம்' இதனுள் ஆழ்ந்த உள்ளார்ந்த கருத்தோட்டமாக வெள்ளமிடுகிறது. 'பிறந்த இடத்துப் பாசம்' என்னும் மதிப்பீடு (value) ஏதோ இலேசானது என்று மெத்தனிப்பதற்கில்லை; நித்தியத்துவம் பெறமுடியாதது என்று மறுப்பதற்கும் இல்லை. இன்றைய தலைமுறை காணாத வாழாத கதையே பாரியின் கதை என்றாலும் அதில் 'பிறந்த இடத்தும் பாசம்' கருத்தோட்டமாக நிழலாடுகிறது என்று காட்டுகிறது பாரி மகளிரின் அற்றைத் திங்கள்' பாட்டு. இதைப்போலப் பாட்டுக்கள் புறநானூற்றில் இருக்கின்றன இது மாதிரி அமையாமல் கதை அல்லது வரலாற்றுக் காட்சி காண்பித்தபடியே பாட்டுக்களும் புறநானூற்றில் தொகுக்கப்பட்டுள்ளன. சிந்தனைப் பிரதிபலிப்பாக (Reflective) உள்ள பாரி மகளிரின் 'அற்றைத் திங்கள்' பாட்டைப் போன்ற பாட்டுக்களை இனங்கண்டு இலக்கியரீதி நோக்கில் பார்க்கவேண்டியது இன்றைக்கு அவசியம்.

மூவேந்தர்கள் பலம் ஓங்கிவந்தது அன்றைக்குத் தவிர்க்க முடியாதது. தமிழர் சமுதாயத்தின் அரசியலில் ஒரு வளர்ச்சி நடைபெறத்தான் வேண்டும் தலைமையைக் கொண்ட கொற்றக் குடை முடியாட்சி தோன்றித் தீரவேண்டியதே. குறுநில அரசுகள் சிதறினால்தானே இந்த வளர்ச்சி சாத்தியமாகும். தவிர்க்கமுடியாத ஒரு சிதறலாகவே பாரியின் பறம்பு நாட்டின் அழிவு விளைந்தது என்று கருதினால் அது மெய்யாகும். பழைய சமுதாய அடிப்படைநிலை மாறும் ஒரு கட்டம் பாரி வள்ளல் வாழ்ந்த காலம். பழைய அடிமட்டம் மாறி வளரும்போது, மேற்கட்டமான ஒரு சில பழைய மதிப்பீடுகள் காப்பாற்றப்படுவது உண்டு. புதிய மதிப்பீடுகளுக்கு ஊட்டம் கொடுக்கும் வகையில் அந்த ஒரு சில பழைய மதிப்பீடுகள் மாய்தலின்றி உயிர்ப்பு மாறாமல் நிலைநிற்பது உண்டு. பாரி மகளிரின் 'அற்றைத் திங்கள்' பாட்டிலுள்ள 'பிறந்த இடத்துப் பாசம்' அந்தச் சமுதாய அடிப்படைநிலை மாறினாலும் தான் மாறாத நிலைபேறுடைமையான மதிப்பீடு ஆகி நிற்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

பாரி மாய்ந்தபின் கபிலர் ஆற்றாமையில் பாடிய பாட்டுக்கள் இலக்கிய ரீதியான நோக்கில் போற்றுதலுக்கு உரியவை. இக் கட்டுரையில் முன்னே ஓரிடத்தில் கபிலரின் ஒரு பாட்டை இலேசாகத் தொட்டுக் காட்டி, அதில் இடத்தின் தூரம் பற்றிய கற்பனை எழுந்து தோன்றுவதைக் குறிப்பிட்டிருக்கிறேன். அதே பாட்டை மேலும் இங்கு முழுமையாகப் பார்க்கலாம்.

பாரி மாய்ந்தான் மூவேந்தரால். கபிலர் பாரியின் பறம்பு நாட்டைப் பிரிந்து வந்தார். பறம்புக் குன்றைப் பிரிய மனம் இல்லாமல் அவர் தவித்தார். பாரி இருந்த காலத்தில் பறம்புக்குன்று புகழால் உயர்ந்து, அதை காணாதவர்க்கும் காது வழியாகப் புகழ்ச்சி காரணமாகச் சிந்தனையில் தோன்றியது முன்பு. பாரி மாய்ந்த இப்பொழுது உலகிலுள்ள வேறு மலைகளைப்போலக் கண்வழியாகவே அது தோன்றுகிறது என்று கபிலர் பாட்டைத் தொடங்குகிறார்.

"ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும் சிறுவரை
சென்றுநின் றோர்க்கும் தோன்றும் மன்ற."

ஈண்டு என்றால் சமீபத்தில் என்றும், சென்று என்றால் தூரத்தில் போய் என்றும் வேறு பொருளும் கூறலாம்.

தமது பாட்டில் கபிலர் பறம்புக் குன்று ஈகை கொடுப்பதில் இணையற்றதாக அந்தப் பாரியைப் போலவே தோன்றுகிறது என்று பாடுகிறார். அந்தப் பறம்பு, சிதறிய மதுவின் சேறு கிடக்கும் வீட்டு முற்றங்களைக் கொண்டது. யானை மென்று போட்ட சோற்றுக் கவளத்தின் சக்கைபோல மதுவின் சேறு சிதறிக்கிடக்கிறது. மேலும் தேர்கள் ஓடும் இடங்களைப் பெற்றுள்ளது பறம்பு. வந்தவர்க்கெல்லாம் இனிய மதுவைப் பாரி வழங்கியிருப்பான், பாரி வழங்கிய கொடையை வெளிப்படையாகக் கவிஞர் இப்பாட்டில் சொல்லாமல், அந்தப் பறம்பு கொடைகொடுக்கிறதாகக் காட்சி தோன்றும்படி பாடியிருக்கிறார்.

"ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும் சிறுவரை
சென்றுநின் றோர்க்கும் தோன்றும் மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்
வார் அசும்பு ஒழுகும் முன்றில்
தேர்வீசு இருக்கை நெடியோன் குன்றே."

(மன்ற - நிச்சயமாக. கோது — சக்கை. அசும்பு - மதுச்சேறு).

இப்பாட்டில் ஈகையாகிய 'கொடுக்கும் பண்பு' என்பது உயிர்ப்பு மாறாத மதிப்பீடாக ஒளிவீசுகிறது. பாரி போன்றவரின் குறுநில அரசுகள் அழிவுற்றுத் தமிழகத்தில் ஒருகுடையாட்சி காலவகையால் படிப்படியாக ஏற்பட்டே தீரும் என்பது ஓர் உண்மையானாலும், ஈகையாகிப் 'கொடுக்கும் பண்பு' சமுதாய மாற்றத்தில் காய பாற்றப்பட வேண்டிய மற்றொரு உண்மையான மதிப்பீடு என்றே அறிகிறோம். இம்மதிப்பீட்டை உள்ளீடாகக் கொண்டு விளங்குவதால் இதைக் கபிலர் பாடிய சிறந்த கவிதை என்று போற்றுதல் உகந்ததாகும்.

புதுப்பார்வையுடன் கபிலரின் இப்பாட்டைக் காணும்போது மற்றொன்று புலனாகாமல் போகாது. கவிஞர் பாடிய பறம்புக் குன்று இங்கு ஒரு சாதாரண வர்ணனைப் பொருளாக இருக்கிறது என்று கருதினால் சரியல்ல. பறப்புக் குன்று சமுதாய மாற்றம் விளையக்கூடியது என்று எடுத்துக் காட்டுவதுபோல் தோன்றுகிறது. பறம்புக் குன்றை ஒரு குறியீடாகக் கபிலர் கண்டார்; நாமும் அப்படியே காண்கிறோம். பறம்புக் குன்று எதற்குக் குறியீடு? சமுதாய மாற்றத்திலும் தான் மாறாத ஈகையாகிய 'கொடுக்கும் பண்பு' என்னும் மதிப்பீட்டுக்கே பறம்புக் குன்றைக் குறியீடு என்று கருதலாம். புறநானூற்றிலுள்ள கபிலர் பாடிய 114-ம் பாட்டு சந்தேகமில்லாமல் ஒரு குறியீட்டியல் பாட்டு.

# முட்டை ஒரு நினைவு—பிரும்மரகசியம்

## ஜோதி ராமலிங்கம்

வடிவம் முட்டை; வட்டமல்ல.

முட்டையில் வட்டம்; வட்டத்தில் முட்டையில்லை.

வட்டத்தின் விளிம்பில் முக்கோண வளைவைத் தீட்டிவிட்டால் முட்டை வடிவு; உயிரனைந்த கரு; கருவைச் சுற்றி சாறு! சாற்றிடையே திரி, திரியோரம் காற்று! நான் கை யடக்கிய ஒரு—சந்தணக் குழம்பின் வார்ப்பு அது!

ஓட்டினுள் உயிர்; ஓட்டைக்காக்க ஓர் உயிர், ஒன்றினின்று ஒன்று; அதனினின்று மற்றொன்று பிரிவு—உயிர்! பிறப்பின் பரிசு இறப்பு சித்த வியாக்கியானம் அல்ல?! சக்தியின் சூட்சுமம்.

நீண்ட நீலப்பாதை! எங்கிருந்து வந்தேன்? எங்கு தொடங்கிய பயணம்? எங்கே முடியப் போகிறது? எங்கணும் புகை மயம்; வேகமாகப் போய்க் கொண்டிருக்கும் நீர்த்துகள் பொதிகள்; ஒன்றை ஒன்று தொடர—ஒன்றோடு ஒன்று மேவ விழி பிதுங்க திக்கெட்டும் நோக்கினேன். ஆ! மறந்தே போனேன்; நான் தேடிய இடத்தில் தான் தானே வந்திருக்கிறேன்! இங்கே யொரு விஞ்ஞானக் கூடம் அமைத்தால்?—எனக்கே ஆராய்ச்சியில் வெற்றி! படைப்பின் ரகசியம் இங்கேதான்! ஆமாம் எனக்கு அந்த வாசல் திறந்துவிட்டது

வெட்டிப்பிளந்த நிலவைத் தொட்டது போன்ற உணர்ச்சி. வெண்ணை போன்ற அதைத் தொட்டுப்பார்த்தேன்: கையில் ஒட்டவில்லை. பளிங்குமல்ல; வைரமுமல்ல! என்ன இது யாரோ காதில் ஊதிவிட்டார்; இதுவா சிருஷ்டி மந்திரம்?! நான் உச்சாடனம் செய்வதா? யார் பணிக்கிறார்? யாரிருந்தால் என்ன? எனக்குள் ஏதோ ஒன்று இறுமாந்தது. ஓங்கார நாதம்-கேட்டால் ஊமையையும் பேசவைக்கும் ஒலிப்பிரவாகம். என்ன அது! ஏதோ பிளந்து விரிகிறது. சிறுசிறுத் துளிகளாக உயிரினம் வடிகிறது. கண்டு பிடித்து விட்டேன்; கண்டு பிடித்துவிட்டேன்! எனக்கு நன்றாகப் புரிகிறது. அது...ஆம்! ஆதிமூலநின் ஆயுதச்சாலை! பிரும்ம ரகசியம்-ஏன் இதை நான் உலகிற்கு எடுத்துச் சொல்லக்கூடாது? திரும்பினேன் உலகை நோக்கி—

எண்ணற்ற மலைகள் ஒன்று சேர்ந்து மோதிய வேகத்தில் பிரளயம் வந்து வீசி யெறிந்தது; அணுவுக்கும் அணுவாய் அப்பாலுக்கும் அப்பாலாய்!

அண்டத்தின் எந்தப் பகுதியோ (?) ஒரு கணவாய் ஓரம்; கண்கள் விரிந்தன; விழிகள் திறந்தன இது தானா! தெரிந்த இடம்போல் இருந்ததா ஊஹூம் தெரியவில்லை. நினைவு விட்டுக்கொடுக்கவில்லை. ஏழு பிறப்பிற்குமுன் ஒன்றோ நான் ஒருவனை இங்குத் தேடினேன். எவ்வளவு நாள் என்று தெரியாது. ஆனால் அவனை நிச்சயம் தரிசித்தேன்!

வெண்ணாடைதரித்த அவன் உலகிற்கு ஒளி வழங்கிக் கொண்டிருந்தான். அவனை மூடிவிட்டால் நடக்கும் வேடிக்கையை நினைத்தேன்—

உணர்ச்சியின் எரிமலை வாயிலில் நின்றிருப்பது தெரிந்தது. நரம்புகளில் வேகம், அப்பு, தேயு, ஜடத்தினுள் சிலிர்த்தது. வெக்கை தழுவியது; வீரம் வீரியமாயிற்று.

நினைவு மயக்கும் துல்லிய காற்றில் இனிமை வந்து தடவியது; கடை வாயிலில் குழகுழப்பு தேடி ஒளிந்துகொள்ள ஓர் இடம்?—ஊம் அந்தகாரத்தில் அது கிடைக்கவா போகிறது. மடை திறந்த வெள்ளம்போல் ஏதோ ஒன்று என்னைத் தன் அலைகரங்களால் உயரப்பிடித்து பூப்போல ஏந்திச் சென்றது.

நினைவு நழுவியது; உணர்ச்சி நீந்தது. தீயின் ஒன்றிப்பு; அதிலோர் குளுமை; திளைத்தல் இளைத்தல், களைத்தல் எல்லாம் அதனியக்கம்

மலர்க்காட்டில் படுத்துக் கிடந்தேன். நறுமணம் நாசியில் திருமணம் கொண்டது. எத்தனை எத்தனையோ மலர்களை கைகளால் அளைந்தெடுத்து மேலே போட்டுக்கொண்டேன். எனக்கு நானே சிரித்துக்கொண்டேன் எத்தனை கோடி வாசனை! உடலெங்கும் நாவெடுத்து அத்தனை மலரின் தேனையும் உறிஞ்சிவிடத் துடித்தேன்.

சுருக்கென்று அறுந்து பார்க்கும்போதே பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் கண்ணொளியின் தீட்சண்யத்தைக் கடந்து சுருங்கி மறைந்து கொண்டது—நினைவு!

(226 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திடமாகவோ அல்லது தன் உள்ளத் தடுமாற்றத்தை மறைத்தோ. பிறகு மகளைக் கண்டிக்கிற போதும் அவன் கோபம் ஓங்கியே தொனிக்கிறது. பிறகு முகம் சோர்ந்துவந்த வைத்தியரும் அவனும் ரகஸ்யமாக அவன் அப்பாவுடன் பேசிவிட்டு(அவர்கள் பேசியது என்ன என்று நமக்கு தகவல் இல்லை) மறுபடியும் லிஸி இருக்குமிடம் வந்தபோது 'நடை சற்று சோர்ந்ததுபோலக் காணப்பட்டது. குரலும் தான்' என்கிற வரிகளில்தான், அவர்கள் பேச்சின் விளைவாக அவன் மனது பாதித்திருக்கக் கூடும் என்று நினைக்கத் தோன்றுகிறது. (அவனை அப்படி பாதிக்கத்தக்கது என்ன என்பது அப்போதைக்கு நமக்கு தெரியாவிட்டாலும் பிறகாவது தெரியவேண்டாமா, இந்த பாதிப்புக்கு பின்னும் அவன் மகளிடம் கொடூரத்தோடு 'நீ இனி எங்கேயாவது விளுந்து கிளுந்து செத்து தொலைஞ்சுபோ' என்கிறான். லிஸி முதல் தட்வையாக எதிர்த்து தந்தையிடம் பேசுகிறாள். இதுக்குப்பின் அவள் எதுவும் பேசவில்லை. பிறகு லிஸி அவனைப் பார்ப்பது கோரமாக ரத்த நுரை தள்ளிய வாயுடன் தான். உற்சாகமாக கேஸ் நடத்த முன்வந்த வைத்தியர் சோர்ந்து வந்ததும் அவர்கள் ரகசிய பேச்சின் விளைவாக குடிகாரன் நடை சோர்ந்து குரல் சோர்ந்து'வந்ததும் என்ன காரணத்தால்? அதன் விளைவாக பாதித்த மனநிலையில் அவன் மரணம் சம்பவித்திருக்கலாம். (அந்த பேச்சு விவரம் தான் நமக்கு தெரியவில்லையே. ஆசிரியர் சொல்லி இருப்பதை நாம் அப்படியே அப்போதைக்கு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் ஒரு காரணக்காரியத் தொடர்பு காட்ட பின்னாலாவது சூசகமாக சொல்லவேண்டாமா? சரி, அவன் சாகவேண்டியவன் என்று ஆசிரியர் முடிவு செய்துவிட்ட பிறகு எந்தவிதமாக அவன் மன உறுத்தல் ஏற்பட்டது அதுக்கு ஏற்ப எந்தவிதமாக அவன் மரணம் சம்பவித்தது என்று உணர்த்த அந்தவித நிகழ்ச்சிக்கான தகவல்களை கோடிகட்ட வேண்டாமா?

அவனுக்கு ஏற்பட்ட சோர்வில், உறுத்தலில் பீதியில் அவன் தன் மரணத்தை வருவித்துக் கொண்டதாகவேதான் படுகிறது, அவன் வார்த்தைகளை (சுயநினைவுடனும் உணர்வு தப்பியும் பேசியதிலிருந்து) சேர்த்துப் பார்க்கிறபோது. இல்லை நான் மேலே குறிப்பிட்ட வேறுவித திடீர் வியாதிகள் ஒன்றினால் ஏற்பட்டதாக சொல்வதானால் அதுக்கான தகவல் இம்மியும் இல்லை ஆசிரியர் காரிய காரணத்தொடர்பு ஏற்படுத்த தவறிவிட்டார் என்றே கூறுவேன். நீங்கள் மறுபடியும் நான் மேலே குறிப்பிட்டவைகளைக்கொண்டு என் முடிவு தவிர்த்த வேறு ஏதாவது ஒரு முடிவுக்கு இயைவாக தகவல்கள் எழுத்தில் காணப்படுகிறதா என்று பார்த்து எனக்கு எடுத்துக்காட்டி நிரூபிக்க முடியும் பட்சத்தில் நன்றி உடையவனாக இருப்பேன். என்னது தவறானால் திருத்தியும் கொள்கிறேன். இதிலே கட்சியாட ஏதுவும் இல்லை உணர்வு சக்தியை சோதித்துப் பார்த்துக்கொள்வதுதானே.

இதேபோல நீங்கள் குறிப்பிட்டுள்ள இதர அம்சங்கள் ஒவ்வொன்றுபற்றியும், நான் என் உணர்வு சக்திக்கு ஏற்ப முடிவு செய்திருப்பதுக்கு ஆதரவாக நான் வாதிட முடியும். ரொம்ப நீளும். இடமில்லை ஒரு சோறு பதம் போதும். என்று நினைக்கிறேன். அவசியம் ஏற்பட்டால் பிறகு பார்த்துக்கலாம்.

இலக்கிய விமர்சனம் ஒரு அறிவு பூர்வமான அணுகுதல் நாவலில் இருக்கிற தகவல்களைத் கொண்டு பொருத்திப் பார்க்கிற காரியம். நீங்களே எழுதி இருப்பதுபோல அறிவின் எல்லைக்குள் நின்று ஆராய்கிற வேலை இதில் படைப்பின் தரத்தை மதிப்பதில் சுமார் என்று சொல்வதை மார்க் விகிதத்தில் வேறொருவிதமாக சொல்லி இருக்கிறேன். மாணவர்கள் எழுத்துக்கு மார்க் போடும் பேராசிரியரின் எழுத்துக்கு மார்க் போட்டு கட்டுவது பொருத்தமே இதை நீங்கள் ஏற்காமல் என்னைக் குத்திக் காட்டும் தோணிப்பில் சில வரிகளை எழுதி இருக்கிறீர்கள். அவசியமில்லாதவை, பண்பு காட்டாதவை. 'நம்மைவிட நம் கலையில் தேர்ந்த ஒருவருக்குத்தான் அந்த உரிமை கிடைக்கிறது, அதுவும் நாம் அனுமதிக்கும்போது மட்டும்' என்கிறீர்கள். யார் யாரைவிடத் தேர்ந்தவர். யாருக்கு யார் உரிமையை அனுமதிப்பது இதெல்லாம் அப்படி தீர்ணயித்துவிட முடியாது. அவர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதிலிருந்து தெரியவருவது. ஒரு நாவல் எழுதியவரைவிட இரண்டு நாவல் எழுதி இருப்பவன் தேர்ந்தவன். ஒரு இலக்கிய சரித்திரம் எழுதி இருப்பவர்களைவிட இலக்கிய விமர்சனம் பல செய்திருப்பவன் தேர்ந்தவன் என்று தரம் இருக்கட்டும்—தொகையளவைக் கொண்டுகூட முடிவு கட்டலாம். மாணாக்கன் ஆசிரியருக்கு மார்க் போடும் கதையாகிவிடும் என்கிறீர்கள். ரொம்ப உண்மை. வ. ரா. என்பவர் யார் என்று கேட்கும் கலாசாலை தமிழ் எம். ஏ. பேராசிரியர்களுக்கு, நூல்நிலையங்களில் உள்ள அவரது நூல்களை படிக்க வாய்ப்புபெற்ற மாணவன் நிச்சயமாக—அந்த பேராசிரியரின் தற்கால இலக்கிய பரிச்சயத்துக்கு—மார்க்போடும் உரிமை வாய்ந்தவன்தான் என்பதில் சந்தேகம் என்ன இருக்கிறது? இதைவிட நீங்கள் இன்னும் பெரிய போடாக 'விமர்சகர் கலைக்கு வெளியில் நின்றுகொண்டு கலையை அலசி ஆராயும் போது அவருக்கு சிறிது அச்சம் இருக்கவேண்டும்' என்பது என் தாழ்மையான அபிப்ராயம்' என்கிறீர்கள். இதில் நான் ஆட்சேபிப்பதுக்கோ இப்படி சொல்வதால் வருத்தப்படுவதுக்கோ, கோபப்படுவதுக்கோ ஏதுவும் இல்லை என்பதை சொல்லிக் கொள்கிறேன்: புத்தம் வீடு நாவலை விமர்சிக்கும் ஒரு விமர்சகனுக்கு ஒரு நல்ல குணம் இருக்கவேண்டும் என்று தாங்கள் சொல்வதில் தவறில்லை. இதை சொல்லும் வாயால் இதையும் சொல்ல விரும்புகிறேன். நீங்களும் திருமதி ஹெப்ஸீபா ஜேசுதாஸன் இருவரும் சேர்ந்து தமிழ் இலக்கிய சரித்திரம் (a hi tory of tamil li era ure) என்ற ஒரு புத்தகம் இங்கிலீஷில் 1961 ல் எழுதி இருக்கிறீர்களே. அதில் கடைசி அத்யாயம், மாடர்ன் பீரியட் என்று 1960 வரையுள்ள இலக்கிய காலம்

பற்றி எழுதி இருக்கிறீர்களே. அதில் வசன எழுத்தாளர்கள் (பக்கம் 261) என்ற பகுதியில் ஐந்து பக்கத்தில் வேதநாயகம் பிள்ளை முதல் திரு. வி க. வரைஒரு பத்துபேர்களை மட்டும் குறிப்பிட்டுவிட்டு பிறகு கல்கிக்கும், புதுமைப்பித்தனுக்கும் பகுதிகள் ஒதுக்கிவிட்டு, தற்கால தமிழ் இலக்கியத்தில் வளர்ந்திருக்கும் செழித்தும் இருக்கும் சிறுகதை நாவல் இலக்கியம் பற்றிய தகவல் எதுவும் இல்லாத (பெயர்களை சொல்ல விருப்பம் இல்லாமல் இருக்கலாம்) வளம்கூட காட்டாத தற்கால தமிழ் இலக்கிய வரலாறு எழுத துணிபவர்களுக்குக்கூட சிறிது அச்சம் இருந்திருக்கவேண்டும் என்று நான் தாழ்மையுடன் சொல்வதை நீங்களும் ஏற்றுக்கொள்ளத்தயங்கமாட்டீர்கள்என்று நம்புகிறேன்.

கடைசியாக முதல்நாவல் என்பதற்காக அனுதாபம் தேவையில்லை என்று விசிறி அடிக்கிறீர்கள். அனுதாபத்துடன் பார்ப்பது என்றால் முன் கூட்டிய வெறுப்பும் அலட்சியமும் காட்டாமல் பார்ப்பது என்றும் நான் விளக்கி இருக்கிறேனே. அதைப் படித்துவிட்ட பிறகுமா இப்படி எழுதுகிறீர்கள்? அனுதாபம் ஆளுக்கல்ல, நூலுக்கு. இலக்கியத் தரம் அதில் ஆரம்பத்திலேயே தென்பட்டிராவிட்டால் நிச்சயமாக அதை மூடிவைத்திருப்பேன். பள்ளிக்கூட ஆண்டு மலரில் கூட, சுமாரென்ன, சிறந்த படைப்புகள் வரலாம். சிறந்த இலக்கியப் பத்திரிகை! ஆண்டு மலர்களில், சுமாரென்ன, உப உபயோகமற்றவை வரலாம். ஆமாம், அனுதாபமாகப் பார்க்கத்தேவையில்லை என்று எனக்கு தாக்கீது பிறப்பிக்க வருகிறீர்களே. நான் காட்டியவை குறைகள் இல்லை, நிறை என்று கூறி என்னை மறுக்க வந்தவரின் கண்ணோட்டத்தில் இந்த நாவலில் ஒரு குறையுமா தென்படவில்லை என்று கேட்டு, அபிமானமாகவும் பார்க்கக்கூடாது என்று நான் சொன்னாலும் சரிதானே ?

—சி. சு. செல்லப்பா

---

# குருட்டுத்தனம்

**வை. ரங்கநாதன்**

எட்டடி மூன்றடியில்
    இருட்டறை
எரிகிறது ஓர்மூலை அகல்விளக்கு
சுற்றிலும்
சுவரெல்லாம் கருமைபூசி
புகைக்கருமை
பிசினுக எழும்பி திற்க
பட்டணத்தின்,
அரவங்கள் சீறுகின்ற
பாதையெல்லாம்
மெர்க்குரிலாம்ப்
நீலவர்ணம் கொட்டுகின்ற
ஓரிடத்தின் அருகினிலே
குகைபோல
அந்த அறை இருக்கிறது
அழுக்குடை
அரைக்கச்சை
கந்தல்பாய்
ஆண்குழந்தை; ஈசானியமூலையில்
நான்
வெளுத்தெடுத்த துணியாக
'மொடமொட'க்கும்
புதுதோட்டு
    இரண்டெடுத்துக்கொடுத்துவிட்டு
பாய்மாற்றி
இருந்தேன்

o o o

உடை
அழுக்கேறிப் போய்விடுமோ...?
என்றபயம் ...!
நெஞ்சில் மட்டும்......
நோய்க் கிருமிபோல புழுக்கூட்டமேறி
நூறுகூடு !
கட்டுவதில் ஸாரமில்லை......!

o o o

கொடுத்தகாசு
    முதலாக்க
கொஞ்சிப்பேசி
குழந்தை எழுந்தபோது
எடுத்துக் கொஞ்சி
'எடுத்துவிட்டேன் முதல்!'
என்று எண்ணிக்கொண்டு
எழுந்து
உடல் தளர்வோடு
வெளியே வந்து
காலரையும் சரிப்படுத்தி
கலைந்த சிகையை,
கையினால் ஒதுக்கிவிட்டு
நிற்கும்போது;
மேலிடித்து
பொதிசுமந்து
கிழட்டு வண்ணான்
மெதுவாகச் சென்றபோது
"குருடா......?"
என்றேன்.

## தமிழ் வளர்த்தவர் நினைவு

'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி மறைந்து பன்னிரெண்டு ஆண்டுகள் ஆகிறது. 1930-க்கள் காலத்தில் தமிழை வளர்ப்பதில் ஈடுபட்டு நின்ற குறிப்பிடத்தக்க ஒரு சில பத்திரிகையாசிரியர்களில் அவர் ஒருவர். மற்றவர்களுக்கு அரசியல், இலக்கியம் இரண்டு மட்டுமே கவனமாக இருக்க. சங்கீதம், சினிமா, நாடகம், விளையாட்டு இவைகளுக்கும் தமிழ் மொழியை பயன்படுத்தியது அவரது தனிச் சிறப்பு. நகைச் சுவையை முதலில் கையாண்டது, அதில் ஓரளவு சாதனை காட்டியதும் குறிப்பிடத்தக்கது. கல்கி நடை என்று இனம் காணக்கூடிய அளவுக்கு ஒரு தனித்த நடையையும் காண முடிகிறது அவரது கட்டுரைகளில். நன்றாக வர்ணிக்கத் தெரிந்தவர் அவர். கல்கியை பின்பற்றுவதாக நினைத்துக்கொண்டு இன்று எழுதும் பக்த கோடிகளைக் கொண்டு கல்கியை அவர் தப்பு வழிகாட்டியவர் என்று சொல்வது அர்த்தமற்றது. அவர் தழுவலை (அன்றைக்கு அது தேவையாக இருந்ததாக அவர் கருதினார்) செய்ததை இன்னமும் திரும்ப திரும்பச் சொல்லி வருவதும் அசட்டுத்தனம். கல்கியின் இடம் அந்தக் காலம், சந்தர்ப்பத்தை வைத்து இன்று நிர்ணயிக்கப்பட வேண்டியது. 1930-க்களில், வ. ரா. போல் கல்கியும் ஒரு சக்தியாக விளங்கியவர். மாறுபட்ட சக்திகள் தான். இரண்டும் தமிழை வளர்த்தன. எல்லா இலக்கியத்துறைக்கும் ஒருவன், ஒரு போக்கு ஈடு கட்ட முடியாது. ஆனால், தமிழ் வளர்ச்சிக்கு கணிசமாக செய்ய முடியும். அதை செய்த ஒரு சக்தி தமிழ் வளர்த்த கல்கி.

## லட்சிய பதிப்பாளன் மறைவு

வை. கோவிந்தன் மறைந்து விட்டார். நண்பர்களால் 'வைகோ' என்று அழைக்கப்பட்ட கோவிந்தன் பெயரை சொல்லும்போது 'சக்தி' பத்திரிகையும் சக்தி பிரசுரமும் கூடவே நினைவுக்கு லந்தே தீரும். அன்று இருந்த எல்லா பத்திரிகைகளிலிருந்தும் முழுக்க மாறுபட்டு. அமெரிக்க 'டைம்' பத்திரிகை மாதிரி என்று அதைப்பற்றி சொன்னதுண்டு. 'சக்தி பிரசுரம்' என்றால் பிரிட்டிஷ் பிரசுரமான 'பென்குவின்' வெளியீடு மாதிரி என்று கருதப்பட்டதுண்டு. லட்சிய பத்திரிகை, லட்சிய பிரசுரம் இரண்டையுமே தன் வாழ்க்கை நோக்கமாக கொண்டவராகவே வாழ்ந்த வை. கோவிந்தன் தமிழ் பிரசுர உலகில் தனித்து நின்ற ஒரு லட்சிய பதிப்பாளன். இன்று அவர் மாதிரி வேறு ஒரு பதிப்பாளன் கிடையாது.

சக்தி கோவிந்தனை எப்படி நாம் மனதில் வைத்துக் கொள்வது ? நாம் தான் எதையும் சீக்கிரமே மறக்கக் கூடியவர்கள் ஆயிற்றே. மறக்க விரும்புபவர்கள் தானே. நல்ல புத்தகங்களை நல்ல முறையில் அச்சிட்டு, வெறும் வியாபார நோக்கத்தோடு பார்க்காமல், மக்களுக்கு தர முன்வரும் பதிப்பாளர்கள் தோன்ற வேண்டும். அந்த மாதிரி யுத்தகங்களை விரும்பி, தேடிப் பிடித்து வாங்கிப் படிக்கும் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ளும் வாசகர்களும் வளர வேண்டும். அப்போதுதான் கோவிந்தன் காட்டிய வழி என்று அவருக்கு என்றைக்குமே முன்னோடிப் பெருமை நிலைக்கச் செய்யலாம். செய்தால், தன் வாழ்வில் கைசுட்டு. நஷ்டப்பட்டு, நொடித்தும் (மனம் ஒடிய வில்லை) போன ஒரு லட்சியவாதியின் ஆத்மாவுக்கு திருப்தி அளிக்க முடியும்.

## தர்மத்தின் பசி

சட்டம் செய்யும் சத்திய மன்றில்
சத்தம் சேர்க்கும் ஜனநாயகம்.
பாலும் தேனும் பெருக்கும் பணியில்
முழுக்கை நக்கும் சுதந்திரம்.
சொகுசாய்க் குந்தி சொல்லால் குதறும்
புதுமதப் பூசாரிகள்.
அறிவைக் கொன்று ஆசானை அடக்கும்
தகப்பன் சாமிகள்.
ஆவினம் காக்க தன்னினம் மாய்க்கும்
தேவதூதர்கள்.
அரிசிக்கும் ஆலைக்கும் ஆசன சுகத்துக்கும்
கொடிபிடி தடியடி.
எதிர்ப் பகையாலே இருமுறை நொந்தும்
திருமுறை வாக்கை தெருவில் வீற்று
புனிதன் புகழை புழுதியில் எறிய—
தன்பசி தீர்க்க தருமம் எழுந்தது.
சூதை வீழ்த்தும் சூறைக் காற்று
கொள்ளையை அழிக்கும் வெள்ளப் பெருக்கு
நீலியை நசுக்கும் நீதியின் சிரிப்பு
போலியைப் பொசுக்கும் பத்தினி நெருப்பு.

—சு. சங்கரசுப்ரமண்யன்

## நான்

கடற்கரையில் நண்டின்
காலடிச்சுவடு.
சுடர்விட்டுச் சுடும்
தார்ரோட்டில் தண்ணீர்.
குமரிச்சிறு பெண்ணின்
கூந்தலில் ஓர்கால்.
குளித்துவிட்டுச் சிலிர்க்கும்
காகத்தின் கூதல்
செஞ்சோற்றுக் கடன்கழிக்க
சிவபெருமான் படும் பாடு.
எட்டுக்கால் பயணத்துக்கு
வெளிச்சமிடும் வாணம்.
ஈஸிஜி காகிதத்தில்
எழுதிவைத்த கோடு.
நனைந்துவிட்ட ஈ
சிகரெட்டுப் புகை
நாற்காலி முதுகு
ஈசல் இறகு
நான்.

—ஹரி சீனிவாசன்

EZHUTTHU Regd. No. M. 7109

அறிவிப்பு

ஜனவரி முதல்

# எழுத்து

அதிக பக்கங்களுடன்

புதிய அம்சங்களுடன்

வெளிவரும்

## எழுத்து

**சந்தா விகிதம்**

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 6-00 |
| மூன்று ஆண்டுகள் | ரூ. 15-00 |
| வெளி நாடுகளுக்கு | ரூ. 8-00 |
| மூன்று ஆண்டுகள் | ரூ. 20-00 |
| தனிப்பிரதி | 50 பைசா |

பிரதி இங்கிலீஷ் மாதம்

முதல் தேதி வெளிவரும்

விவரங்களுக்கு :

எழுத்து

19-A, பிள்ளையார் கோவில் தெரு,

சென்னை-5

## EZHUTTHU

**Tamil literary monthly**

**ADVERTISEMENT TARIFF**

*INSIDE PAGE*

| | | |
|---|---|---|
| Full Page | 15×20 cms | Rs 80-0 |
| Half „ | 15×10<br>7½×20 „ | Rs. 40-00 |
| Quarter „ | 7½×10<br>15× 5 „ | Rs. 20-00 |
| Back cover | | Rs. 100-00 |
| Inside covers | | Rs. 90-00 |

*Concession for Contract Page*

EZHUTTHU

19-A. Pilliar koil St., Madras-5

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane Madras-5